இதழ்-64

01.10.2023

# தும்பி

பல்சுவை மின்னிதழ்




## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்
வ.டியனி

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

03 நேர்த்தி முறைகள் எல்லை மீறுகின்றனவா?
06 பெற்றோர்களே... உங்களுக்குத்தான்..!
11 தொடரும் போதைக்கெதிரான பயணம்
12 செயற்கை முறை கருத்தரிப்பு சிகிச்சை நன்மையா? தீமையா?
16 எருமைகளை பாதுகாக்கும் தமிழக அரசு
17 தற்கொலைகளால் தடமழியும் தலைமுறைகள்
20 சித்திராங்கதா
23 ஆச்சரியப்படுத்தும் நான்காம் கைத்தொழில் புரட்சி
27 ஒளிரும் கடல்
28 விற்பனைப் பொருளாகும் உடல்
33 கலைக்கும் அழகிற்கும் இடையிலான தொடர்பு
38 கவிதையும் கவிஞர் முல்லையின் கவிதைகளும்
42 இலங்கையில் இளையோர் உலகக்கிண்ணம் 2024



வாசகர்கள் அனைவருக்கும் இனிய சிறுவர் மற்றும் முதியோர் தின நல்வாழ்த்துக்கள்

# நேர்த்தி முறைகள் எல்லை மீறுகின்றனவா...?




எந்த ஒரு சமய வழிபாட்டு முறையையும் விமர்சிக்க வேண்டும் என்கிற நோக்கத்திலோ, கேலிக்குள்ளாக்க வேண்டும் என்கிற குறிக்கோளோடோ தூமியின் இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்படவில்லை. தேவையற்ற சில புதுமையான நேர்த்தி முறைகள் உண்மையான பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதோடு, எதிர்கால சந்ததியினருக்கு வழிபாட்டு முறைகள் பற்றிய தவறான புரிதலை முன்னுதாரணமாக வழங்கிவிடக் கூடாது என்கிற ஒரு அச்சத்தில் இந்த ஆசிரியர் பதிவு எழுதப்படுகிறது. இது உண்மையான மெய்யடியார்களை மனம் நோகச் செய்யாது என்பது தூமியின் திடமான நம்பிக்கை.

சமீபகாலமாக காவடிகள் மூலமாக அதிலும் பறவைக்காவடிகள் மூலமாக நேர்த்திக்கடன் செய்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனது பறவைக் காவடி வித்தியாசமாக தெரிய வேண்டும் என்பதற்காக சயன நிலை, தியான நிலை என்று பல்வேறு நிலைகளில் தம் உடலில் பல இடங்களில் அலகுகளை குத்தி, காவடி எடுக்கிறார்கள். அதுபோக சகோதரர்கள் சேர்ந்து, கணவன் மனைவியாக, கைக்குழந்தையுடன் தந்தையாக என்று பறவைக் காவடிகளில் ஏதேனும் புதுமைகளை புகுத்திக் கொண்டே இருக்கிறார்கள். உண்மையான பக்தியால் இவ்வாறு எல்லாம் செய்கிறார்களா என்றால் இல்லை என்பதே பலரது பதில் ஆகிறது. எனது காவடியைப் பற்றி எல்லோரும் கதைக்க வேண்டும், ஊடகங்களில் நான் வர வேண்டும், ஆலய திருவிழாவில் என் காவடி வித்தியாசமாக தெரிய வேண்டும் என்பது போன்ற ஆசைகளின் வெளிப்பாட்டிற்கே இவ்வகையான பறவைக்காவடிகள் தேவைப்படுகின்றன.

பறவைக் காவடிகளின் ஆரம்ப காலங்களில் அவை காவடி எடுப்பவரை அதிகம் வருத்தாததாகவும், மற்றவர்களுக்கு இடையூறு இல்லாததாகவுமே இருந்து வந்தன. உதாரணமாக நல்லூரை அண்டிய ஒரு ஆலயத்தில் ஆரம்பமாகும் காவடி நல்லூர் முருகன் கோயிலுக்காக எடுக்கப்படும். ஆனால் இன்று பருத்தித்துறையில் இருந்து நல்லூர்க்கும், காரைநகரில் இருந்து செல்வச்சந்நிதிக்கும் காவடிகள் எடுக்கப்படுகின்றன. இந்த மிக வெப்பமான காலநிலையில் உடல் முழுவதும் அலகு குத்தி மிக நீண்ட



தூரம் காவடி எடுப்பது குறித்த நபருக்கு ஆரோக்கியமானதல்ல. அது மட்டுமல்லாமல் அவனுடன் ஒரு பெரும் கூட்டம் வீதியால் போக்குவரத்து விதிகளை மதிக்காமல் செல்வதும், சந்திகள் மற்றும் இதர ஆலய வாசல்களை அண்மிக்கும் போது நடு வீதியில் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டு விட்டு, அவற்றை அப்படியே விட்டுவிட்டு சென்றுவிடுவார்கள்.

இந்த செயற்பாடுகள் போக்குவரத்து நெரிசல்களை மட்டுமன்றி உயிர் குடிக்கும் விபத்துக்களையும் ஏற்படுத்தியுள்ளன. யோசித்துப் பாருங்கள். நினைத்த காரியம் நடக்க வேண்டுமென நீங்கள் செய்யும் நேர்த்திக் கடன் இன்னொருவரின் உயிரையே பறிக்கும் அபாயம் இருக்கிறது என்றால் உங்கள் பக்தி உங்களுக்கு பலன் அளிக்குமா? அது புண்ணியமா? பாவமா? ஆலயத்தில் நேர்த்திக்கடன் செய்யலாம். ஆனால் வீதி தோறும் நேர்த்திக் கடன் செய்ய வேண்டுமா? நடு வீதியில் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றச் சொல்லி எந்த ஆகமத்தில் உள்ளது? ஆண்டவனுக்காக நேர்த்தி என்றால் அதை ஏன் விதம் விதமாக படமெடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிடுகிறீர்கள்?

காவடியாட்டம் என்பது பழந்தமிழர் நடன முறைகளில் ஒன்று. இறை சிந்தையோடு தோளில் காவடியை ஏந்தி, காவடிச் சிந்து இசைக்க ஆடுவார்கள். காவுதடி எனும் சொல்லே காவடி என்று மருவியதாக கருதப்படுகிறது. சங்க இலக்கிய நூற்களில் ஒன்றான புறநானூற்றில் மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் போது தங்களுடைய பொருள்களை ஒரு தண்டின் இரு முனைகளிலும் கட்டிச் சென்றனர் என்ற குறிப்புக் காணப்படுகிறது. ஔவையார் தமது உடைமைகளை இது போன்று தண்டில் கட்டிச் சென்றார் என்று புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

அகத்தியர் கூற்றுப்படி இடும்பன் இரு சிகரங்களை காவடியாக தூக்கி வந்த போது முருகன் அருள் இடும்பனுக்கு கிடைத்தாக கந்தபுராணம் கூறுகிறது. ஆகவே, அபிசேக பொருட்களை காவடியாக எடுத்துச் சென்று கந்தனை வழிபட்டால் அருள் கிடைக்கும் என்கிற ஐதீகத்தில் ஆரம்பமான இந்த வழிபாட்டு முறையின் தார்ப்பரியத்தை எல்லோருக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டியது மதகுருமார்களதும் மத தலைவர்களதும் முதற்கடமையாக அறியுங்கள். பக்தர்கள் ஆயுதங்களால் உடலை வருத்தி நேர்த்தி செய்ய வேண்டியதில்லை என்பதை உறுதிபட கூறுங்கள்.

தயவு செய்து, உங்கள் சமயத்தின் தரத்தை நீங்களே குறைத்துக் கொள்ளாதீர்கள். "அன்பே சிவம்" எனும் அமைதியான வழிபாட்டு முறையைக் கொண்ட சமயத்தில் புதுப்புது கேலிக்கைகளை புகுத்தி உங்கள் சமயத்தை நீங்களே நலிவடையச் செய்து விடாதீர்கள். இன்னொருவருக்கு இடையூறான வழிபாட்டை என்றென்றும் ஆண்டவன் விரும்புவதில்லை.

# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்




# பெற்றோர்களே.... உங்களுக்குத்தான்!

ஒவ்வொரு கவிஞர்களுக்குள்ளும் ஏதோ ஒரு விதை இருக்கிறது. அதிலிருந்துதான் கவிதைகள் பூக்கின்றன. அதனாலேதான் உண்மையான கவிஞர்களின் கவிதைகள் காலம் கடந்தும் நிற்கின்றன.

பனை ஓலையில், இரும்பு ஆணி கொண்டு எழுதிய பாடல்கள் ஆயிரம் ஆண்டுகளைத் தாண்டிவந்து நிற்கின்றன.

திருக்குறளும், தேவாரமும், நாலாயிர திவ்ய பிரபந்தமும் எத்தனை காரியங்களுக்கும், தீக்கும், வெள்ளத்திற்கும் தப்பி காலத்தை வென்று நிற்கின்றன.

எப்படி ?

அதற்குள்ளிருக்கும் உண்மையின் சக்தியாக இருக்குமோ ?

பாரதியின் பாப்பா பாட்டு.

அவன் என்ன நினைத்து எழுதினானோ தெரியாது. இன்றும் நமது வாழ்க்கையில் அது மிக மிக அர்த்தம் உள்ளதாக இருக்கிறது. காலத்தின் சத்தியத்தில் அது இன்றும் பரவலாக ஒலிக்கிறது.

தொலை நோக்கு கொண்ட நம் வீரத்தமிழனின் வரிகளை வெறும் நான்கு மதிப்பெண் பெறுவதற்காக பள்ளியில் படித்ததை மறந்து வாழ்விற்காய் ஒருமுறை வாசித்துப் பார்ப்போம்.

பாரதி மழலைகளிற்காக எழுதிய பாடல். ஆனால் மழலைகளிற்கு முன் பெற்றோர் அதை புரிந்து கொள்ள வேண்டிய தேவை சமூகத்தில் இன்றுள்ளது. என் குழந்தை POGO பாத்தாதான் சாப்பிடுவான் என்று பெருமை பட்டுக்கொள்ளும்

பெற்றோருக்கு தான் பாரதியின் பாப்பா பாட்டு புரியவேண்டிய அவசியம் அதிகம் இருக்கிறது. சிறுவர்களிற்கான இன்றைய தினத்தில் பெற்றோர் - கற்றோர் நாம் அனைவரும் இந்தப்பாடலை பொறுப்புடன் வாசிப்போம்.

"ஓடி விளையாடு பாப்பா, - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா,"

இன்று கைப்பேசி , மடிக்கணினி தொலைக்காட்சி என்று எத்தனையோ சாதனங்கள் வந்து விட்டன. இந்த குறுத்திரை சாதனங்களோடு குறுகிவிட்டது குழந்தைகள் உலகம். பிள்ளைகள் வெளியே சென்று விளையாடுவது என்பது மிக மிக குறைந்து விட்டது. வெளியில் சென்று விளையாடுவதால் என்னென்ன நன்மைகள் ?

முதலாவது, மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து விளையாட கற்றுக் கொள்ளலாம். சமூகத்திறன் வளரத் தொடங்குகிறது.

இரண்டாவது, அப்படிச் இப்படிச் செய் என்று சொல்லுவதிலும், அப்படி மற்ற குழந்தைகள் சொல்வதை கேட்பதிலும் ஒரு தலைமை பண்பு வளர வழி இருக்கிறது.

மூன்றாவது, வெளியில் விளையாடும் போது வெயில் பட்டு, விட்டமின் டி கிடைக்க வழி பிறக்கும்.

நான்காவது, ஓடி விளையாடினால் தசைகள் வலுப் பெறும்.

ஐந்தாவது, ஓடி விளையாடும் போது மூச்சு வாங்கும். அதிகமான பிராண வாயு உள்ளே செல்லும் போது இரத்தம் சுத்திகரிக்கப்படும். அது மட்டும் அல்ல உடலில் உள்ள அனைத்து பாகங்களுக்கும் பிராண வாயு அதிகமாக கிடைத்து அவை நல்ல நிலையில் செயல் படும்.

இவ்வாறு வெயிலில் ஓடியாடி விளையாடும் சில சிறுவர்களை அட்டையில் பார்க்கிறீர்கள். பாரதி அடையாளப் படுத்தியதும் இவர்களைத் தான். இந்த வயதில் ஓடிக் களைத்து விழுந்து எழும்பி விளையாடாமல் பிறகு எந்த வயதில் விளையாடப் போகிறார்கள்?

வீட்டுக்குளே இருந்து கொண்டு கைப்பேசியோடு அடைந்து கிடந்தால், இது ஒன்றிற்கும் வழி இல்லை.

"ஒரு குழந்தையை வையாதே பாப்பா"

ஓடி விளையாடுதல் இன்பம். அதில் குரோதமும் பகையும் உள்நுழைய இடந்தரல் ஆகாது என்று மழலைக்கு புரியும்படி பாரதி சொல்கிறான்.

குழந்தைகளிற்கு இன்றைய பெற்றோர்கள் பலவிடயங்களை சொல்வதில்லை. சொன்னால் புரியாது என்று சாட்டு மட்டும் சொல்வார்கள். புரிவது போல் சொல்ல பெற்றோர்க்கு தெரியவில்லை என்பதே இன்றைய சமூகத்தின் அவலமாயுள்ளது. பாரதி தெளிவாய் வார்த்தைகளை தேர்ந்தெடுத்து புரியவைக்கிறான் பாருங்கள்.

"சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா"

இயற்கையை இரசிக்கப் பழகு. நம் உயிர் உள்ளவரை இந்த உலகை - மக்களை இரசிக்க தெரிந்தால் மட்டுமே இன்பம் எம் மனதில் நிலை கொள்ள முடியும். இரசனை அறியா மானிடர் வாழ்வில் இன்பம் என்பதை இரவலாக எத்தனை நாட்களிற்குத் தான் புகுத்த முடியும்? இயல்பான இன்பத்திற்கு இரசனை மறவா உள்ளமே வழி என்று மழலைகளுக்கு சொல்லிக் கொடுங்கள். எந்த துன்பத்திலும் அவர்களுக்கான இன்பத்தை அனுபவிக்க கற்றுக் கொடுங்கள்.

"கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா"



சமுதாயத்தில் பசித்தவர்கள் இருப்பார்கள். பசிக்காக திருடிவிட்டால் அவர்களைப் புரிந்து கொள். அவர்கள் மேல் இரக்கம் கொள். திருடும் காக்கையை காட்டி கற்றுக் கொடுங்கள். "பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே" என்று எண்ணுகிற மனம் எத்தகைய நிம்மதியளிக்கும் என்று குழந்தைகளிற்கு புரியவையுங்கள்.

"பாலைப் பொழிந்துதரும் பாப்பா,
- அந்தப் பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் -
அது மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும்நல்ல குதிரை -
நெல்லு வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மைஆடு, -
இவை ஆதரிக்க வேணுமடி பாப்பா."

வீட்டில் வேலைக்கு இருப்பவர்களை சில எஜமானர்கள் அடிமைகளை போல நடத்துவார்கள். மரியாதை எல்லார்க்கும் உண்டு என்று அவர்கள் அறிவதில்லை. தினம் ஒரு வசவு தான். நமக்கு கீழே வேலை செய்பவர்களை நாம் தான் ஆதரிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுங்கள் மழலைக்கு. குதிரையும், மாட்டையும், ஆட்டையும் ஆதரித்துப் பழகி விட்டால் பின்னாளில் தனக்காக வேலை செய்பவர்களின் உழைப்பை மதிக்கும் மனம் தானே வளரும். மழலைகள் மனதில் இதனை கவனமாய் விதையிட வேண்டியது நம் பொறுப்பல்லவா?

மழலை மாறாத வயதிலேயே பள்ளியில் நாளின் பாதி நேரம் செலவிட வைத்து, மாலை வீடு

திரும்பியவுடன் தனி வகுப்பு சென்று பாடம், இரவு வீடு திரும்பியவுடன் பள்ளி வீட்டு வேலைகள் என்று விளையாட வேண்டிய இந்த வயதில் காலை முதல் மாலை வரை புத்தக மூட்டை சுமக்கும் சுமை தாங்கியாக சிறார்களை மாற்றியுள்ளது இன்றைய உலகம். என்னதான் மாணவர்களின் புத்தக சுமையை குறைக்க அரசு முப்பருவமுறையை கொண்டு வந்தாலும், இன்று மாணவர்கள் மன நிலை ஒரு இயந்திரம் போலவே மாறி வரும் அபயத்தை நாம் ஏன் இன்னும் உணரவில்லை?

ஒருமணிநேரம் கூட ஓய்வில்லாத கல்வி எதற்குதவப் போகிறது?

“காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.”

எத்தனை திறமான நேரசூசி. படிப்பு மனதில் பதிய நல்ல நெகிழ்வான மனம் வேண்டும். மனதை நெகிழ்விக்கும் இசை மற்றும் கலைகளை மழலைகள் பழக வேண்டியதும் அவசியமே. நமக்கான நாளை நல்லமுறையில் அமைக்க பட்டியல் போட்டு தருகிறான் பாரதி.

“பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா”

தவறுகள் செய்வது கூடாது. பாவங்கள் செய்வது ஆகாது. பொய் சொல்வது தவறு. ஆதலால் கூடாது என்றான். ஆனால் ஆபத்திற்கு சொல்லலாம். தவறிற்கு தண்டனை பெறலாம். ஆனால் புறம் பேசுதல் பாவம். எந்தக் காரணத்திற்காயும் அதைச் செய்தல் ஆகாது என்பதை வலியுறுத்திச் சொல்கிறான்.

ஒரு வேளை மற்றவர்கள் மேல் பழி சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணம் வரலாம். அந்த எண்ணம் உருவாகுவது மனதில் தோன்றுகிற அச்சத்தினாலே ஆகும். அந்த அச்சம் நீங்கி துணிவு வருமாயின் எதற்காகவும் ஒருவன் பாவம் செய்யமாட்டான். அந்த துணிவையும் தன் பாடல் வரிகளிலே தருகிறான் பாரதி.

“தெய்வம் நமக்குத்துணை பாப்பா -
ஒரு தீங்குவர மாட்டாது பாப்பா.”

துணிவாய் உண்மை சொல். பொறுப்பை ஏற்றுக் கொள். துன்பம் வரலாம். தீங்கு வராது. உண்மை சொல்லி வாழ்ந்தால் தெய்வம் உனக்கு துணையாக இருக்கும். பயப்படாதே என்று தைரியம் சொல்லித் தருகிறான்.

பெண்கள் கொஞ்சம் பயந்த சுபாவம் கொண்டவர்கள். எதற்கு எடுத்தாலும் ஒரு ஆணின் துணையை நாடுபவர்கள். தவறு செய்பவர்களைக் கண்டால் பயந்து ஒதுங்கக் கூடாது. சண்டை போடு அவனிடம். அவனை அவமரியாதை செய். துணிந்து நில் என்று பெண்குழந்தையிடத்தில் தைரியத்தை விதைக்கிறான்.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்ததெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா"

இத்தனையும் ஒரு குழந்தைக்கு தாய் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆனால் பாரதி சொல்லிக் கொடுக்கிறான். சொல்லிவிட்டு இதையும் சொல்கிறான்.

"தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா, தேம்பி யழுங்குழந்தை நொண்டி, - நீ திடங்கொண்டு போராடு பாப்பா.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே, - அதைத்தொழுது படித்திடடி பாப்பா"

மொழியின் மேல் மதிப்பு வேண்டும். நாட்டையும், மொழியையும் மதிக்கத்தெரியாதவன் எவனோ அவன் இந்த நொடியே இறந்து போகலாம். அவனால் இந்த உலகிற்கு எந்த நன்மையும் வரப்போவதில்லை.

தமிழில் நமக்கு நூல்களை தந்தவர்கள் மகான்கள். வள்ளுவரும், இளங்கோவும், கம்பனும், ஆழவார்களும், நாயன்மார்களும் நாம் உய்ய வேண்டும் என்று தாங்கள் தேடிக் கண்ட உண்மைகளை பாட்டாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். நன்றி வேண்டும். அவர்களுக்கு நன்றி சொல்லும் விதமாக , தமிழை தொழுது படித்திடச் சொன்னான்.

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்.
உயிர்க ளிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் வயிர முடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா"

இப்படித்தான் ஒரு தமிழ் மகள் வளர வேண்டும் என்றான்.

**சொல்லித் தருவோம் ~ அடுத்த தலைமுறைக்கு. அது நம் அதற்கடுத்த தலைமுறையையும் காக்கும்.**



## தொடரும் போதைக்கெதிரான பயணம்....

யாழ் பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் 22.09.2023 அன்று இடம்பெற்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கில் வளவாளராக கலந்து கொண்ட மருத்துவர். திரு. ரஜீவ் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய அமைப்பும் உருவாக்கப்பட்டது. அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்புடன் சிவபூமி மற்றும் தூமி அமைப்புக்கள் முன்னெடுத்த மேற்படி நிகழ்வானது விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர் கருத்திட்டத்தின் ஒரு அங்கமாகும்.








## பலி வாங்கும் மீன்

தாய்லாந்தின் வடகிழக்கு கிராமப்புறங்களில் ஏராளமான மக்கள் கோய் ப்லா என்ற மீன் உணவை மதிய உணவாக சாப்பிட்டு வந்துள்ளார்கள். கோய் ப்லா என்பது மசாலா மற்றும் சுண்ணாம்பு கொண்ட பச்சையான மீன் உணவு ஆகும். இந்த பச்சையான மீன் உணவை ஒரு முறை சாப்பிட்டாலே புற்றுநோய் வந்து இறக்கும் அளவிற்கு ஆபத்தானது. தாய்லாந்து மக்களில் சுமார் 20000 பேர் ஆண்டு தோறும் இந்த பச்சை மீனை சாப்பிட்டு கல்லீரல் புற்று நோய்க்கு ஆளாகிறார்கள்.

ஈசான் மாகாணம் முழுவதும் கிராமவாசிகளுக்கு கல்லீரல் ஃப்ளூக் பரிசோதனை செய்து கொய் பிளா மற்றும் பிற ஆபத்தான மீன் உணவுகளின் ஆபத்துகள் குறித்து மருத்துவர்கள் எச்சரித்து வருகிறார்கள். மேலும் கோய் ப்லாவை பச்சையாக சாப்பிட வேண்டாம் என்று மருத்துவர்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஆனால் பல 100 ஆண்டுகளாக தாய்லாந்தின் ஈசான் பகுதி மக்களின் பழக்கத்தை மாற்றுவது எளிதான காரியம் இல்லை என்று கூறுகிறார்கள்.



# செயற்கை முறையிலான கருத்தரிப்பு சிகிச்சை

## நன்மையா...? தீமையா...?

ஜெயக்காந்தன் கனிஷ்ரா
ஊடகக்கற்கைகள் துறை.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

இயற்கையான முறையில் காணப்படும் சில குறைபாடுகளால் குழந்தைகள் அற்ற தம்பதிகள் தமது குழந்தைக்கான தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய அளப்பெரிய வாய்ப்பாகவும், கொடையாகவும் அமையப்பெறுவதே செயற்கை முறையிலான குழந்தை தரிப்பு சிகிச்சை முறைகள் ஆகும். பொதுவாக குழந்தையை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் இருந்தும் இயற்கையாக காணப்படும் உடலியல் குறைபாடுகள் மற்றும் பிரச்சனைகள், விபத்துகளின் காரணமாக ஏற்படும் இழப்புக்கள் போன்றவற்றின் காரணமாக இயற்கையான முறையில் குழந்தைகளை பெற்றுக் கொள்ள முடியாத தம்பதிகளுக்கு இவ்வாறான சிகிச்சை நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

தம்பதிகள் இவ்வாறான சிகிச்சை முறைகளை மேற்கொள்கின்றபோது அவர்களுக்கு உடலியல், உளவியல் ரீதியிலான பல பாதிப்புகள் ஏற்படுவது என ஆய்வுகள் கூறுகின்றன. இவ்வாறான செயற்கை கருத்தரிப்பு முறைகள் அனைத்துமே சாதகமாக அமையும் என்று கூறி விட முடியாது. சில தம்பதிகள் தமது வாழ்நாள் காலத்தில் ஐந்துக்கு மேற்பட்ட செயற்கை முறையிலான கருத்தரிப்புக்கு உட்பட்ட பின்னரே குழந்தைகளை பெறுவதாக கூறுகின்றனர். இவ்வாறான சிகிச்சை முறைகளின் காரணமாக அதிகபட்சமாக இரண்டு அல்லது மூன்று கருமுட்டைகள் மட்டுமே கருப்பைக்குள் வைக்க முடியும். இதில் எத்தனை கருமுட்டைகள் வேண்டுமானாலும் கருவாக வளர வாய்ப்பிருக்கின்றது ஆனால் நேரங்களில் எதுவுமே கருவாக வளராமலும் போய்விடும்.

இவ்வாறு பரிசோதனையின் மூலம் பிறந்த குழந்தைகளை சோதனைக் குழாய் குழந்தைகள் (Test Tube

Baby) என்று மருத்துவ ரீதியாக பேச்சு வழக்கில் அழைப்பர். இவ்வாறான சிகிச்சைகள் மூலம் பிறக்கும் குழந்தைகள் சாதாரணமாக இயற்கை முறையில் கருத்தரித்து பிறக்கும் குழந்தைகளை விட அதிக திறமை கொண்டவர்களாகவும், அதிகளவு புத்தி கூர்மை கொண்டவர்களாகவும், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களாகவும் காணப்படுவது ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சிகிச்சைகள் மூலம் பிறக்கும் குழந்தைகளை பராமரிப்பது பெற்றோருக்கு ஒரு சிரமமான காரியமாக அமைகிறது காரணம் குறித்த குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் மிக வேகமாக தொற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என குழந்தைக்கான வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.


குழந்தை இல்லை என்ற தம்பதியர்களின் ஏக்கத்தையும், கனவையும் நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கான ஓர் மகவாக இவை காணப்படுகின்றன. இந்த செயற்கை கருவுறுதலில் பலவகைகள் காணப்படுகின்றன இவ்வாறு



கருத்தரித்தல் சிகிச்சைகளின் IUI (In Utero Insemination), IVF (In Vitro Insemination) , Surrogacy போன்ற பிரதான 03 வகைகள் காணப்படுகின்றன.

## IUI (In Utero Insemination):-

பெண்ணின் கருப்பையில் அல்லது கருப்பையின் வாயிலில் ஏதேனும் பிரச்சினை இருக்கும்போது விந்தணுவால் கருமுட்டையை நீந்தி அடைய முடியாது. அந்த நிலையில் ஆணின் விந்தணுவை ஊசி வழியாக நேரடியாக கருப்பையின் உள்ளே செலுத்தும் முறைதான் இது. கருப்பைக்குள் செலுத்தப்பட்டாலும் அங்கிருந்து கருமுட்டையை தேடி நீந்திச் செல்ல வேண்டியது விந்தணுவின் வேலை. செயற்கை கருத்தரித்தலில் இருக்கும் முறைகளிலேயே இதுதான் மிகவும் எளிதான முறை.



## IVF (In Vitro Insemination):-

சோதனைக் குழாய் கருத்தரித்தல். பெரும்பாலான செயற்கை கருத்தரித்தலில் மேற்கொள்ளப்படும் முறையாக IVF இருக்கிறது.

பொதுவாக ஆரோக்கியமான கருமுட்டையும், ஆரோக்கியமான விந்தணுவும் சேர்ந்து கருவைத் தாயின் கருப்பையில் உருவாக்கும். ஒருவேளை தாயின் கருமுட்டை ஆரோக்கியமாக இல்லையென்றால் அல்லது விந்தணு ஆரோக்கியமாக இல்லையென்றால் கரு உருவாகாது அல்லது ஆரோக்கியமற்ற கரு உருவாகும். அந்தச் சூழ்நிலையில், நல்ல கருமுட்டையைத் தாயிடமே உருவாக்கி அல்லது வேறு யாராவது பெண்ணிடம் ஆரோக்கியமான கருமுட்டையைக் கொடையாகி வாங்கி அது சோதனைக் குழாயில் பாதுகாக்கப்படும், அதே போல ஆணிடம் ஆரோக்கியமான விந்தணுவை உருவாக்கியோ அல்லது வேறு ஒரு ஆணிடம் விந்தணுவைத் தானமாக பெற்றோ அதையும் சோதனைக் குழாயில் சேமித்து இறுதியில் இரண்டையும் சோதனைக்குழாயிலே சேர்த்து கரு (Embryo) உருவாக்கப்படும். இந்தக் கரு சில நாட்கள் சோதனைக் குழாயிலே வைத்து அது நல்ல ஆரோக்கியமான நிலைக்கு வந்தவுடன் தாயின் கருப்பைக்குள் (Embryo Transfer) செலுத்தப்படும்.




ஒரு பெண்ணிடம் ஒரு மாதவிடாய் பருவத்தில் அதிகபட்சமாக எட்டில் இருந்து பத்து கருமுட்டைகள்தான் உற்பத்தி ஆகும். செயற்கை கருத்தரித்தலில், இந்தக் கருமுட்டையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக ஹார்மோன் ஊசிகள் போடப்படும், ஒரு IVF சைக்கிளில் கிட்டத்தட்ட பத்து ஊசிகள் வரையும் கூட சில நேரங்களில் போடப்படும், இந்த ஹார்மோன் ஊசிகள் அனைத்தும் மிகவும் வலி நிறைந்த ஊசிகள். ஒருவேளை கருமுட்டையைத் தானமாக பெறும் பட்சத்தில் தானம் கொடுக்கும் பெண்ணிற்கும் இத்தகைய ஊசிகள் தொடர்ச்சியாக போடப்பட்டு பிறகு சிறிய அறுவை சிகிச்சை வழியாக கருமுட்டை பிரித்தெடுக்கப்பட்டு சோதனைக் குழாயில் பாதுகாக்கப்படும்.

அதே போல ஆணுடைய விந்தணுவும் பெறப்பட்டு அதற்கு மரபணு சோதனை செய்து சோதனைக் குழாயில் பாதுகாக்கப்படும். ஒருவேளை விந்தணு தானம் பெறும் போது விந்தணு காப்பகத்தில் இருந்து மரபணு சரியாக உள்ள விந்தணு பெறப்பட்டு சோதனைக் குழாயில் பாதுகாக்கப்படும். சில நாட்களில் அந்த விந்தணுவையும், கருமுட்டையும் சேர்த்து சோதனைக்குழாயிலேயே கரு உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்படும், இந்த கரு சில நாட்கள் மேற்பார்வைக்குப் பிறகு நல்ல வளர்ச்சியடையும் நிலைக்கு வந்த பிறகு சிறிய அறுவை சிகிச்சை வழியாக பெண்ணின் கருப்பையில் வைக்கப்படும்.

கருவை கருப்பையில் வைத்ததற்குப் பிறகும் கூட வலி நிறைந்த ஹார்மோன் ஊசிகள் தொடர்ச்சியாக பிரசவ காலம் முழுக்க செலுத்தப்படும். செயற்கைக் கருவுறுதல் சிகிச்சையில் மிகுந்த கடினமான ஒன்றாக இந்த ஊசிகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக நடக்க முடியாது, உடலில் தடிப்பு ஏற்படும், சில நேரங்களில் உடல் முழுவதும் அரிப்பு, ஒவ்வாமை கூட ஏற்படலாம். பிரசவ காலம் முழுவதும் ஒரு பெண் கிட்டத்தட்ட 40 ஊசிகள் போட வேண்டியிருக்கும். செயற்கை கருத்தரித்தலில் மிக அதிகமாக பின்பற்றும் முறையாக இந்த சோதனைக் குழாய் கருத்தரிப்புதான் இருக்கிறது.

## Surrogacy என்னும் வாடகைத்தாய் முறை:-

தம்பதியினரில், பெண்ணின் கருப்பை கருவைச் சுமக்க முடியாத அளவிற்குப் பலவீனமாக இருக்கும் பட்சத்தில், அந்தப் பெண்ணுடைய கருமுட்டையையும், ஆணின் விந்தணுவையும் சேர்த்து சோதனைக் குழாயில் உருவாக்கப்படும் கருவை இன்னொரு பெண்ணின் கருப்பையில் வைத்துப் பிரசவம் வரை கருவை வளர்க்கும் முறையே வாடகைத்தாய் முறை. வாடகைத்தாயில் இரண்டு வகைகள் உண்டு, ஒன்று, கருப்பையை மட்டுமே பிரசவ காலம் வரை கொடுக்கும் வாடகைத்தாய் முறை. இந்த முறையில் வாடகைத்தாயிற்கும் குழந்தைக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. இன்னொரு வகையில், தம்பதியரில் பெண்ணின் கருமுட்டையால் கருத்தரிக்க முடியாத நிலை வரும்போது ஆணின் விந்தணு வாடகைத்தாயின் கருப்பையில் செலுத்தப்பட்டு கரு உருவாக்கப்பட்டு, வளர்க்கப்படும். இந்த முறையில் வாடகைத்தாயின் கருமுட்டையே பயன்படுத்தப்படுவதால் குழந்தை யோடு மரபணு ரீதியாக வாடகைத்தாய்க்குத் தொடர்பிருக்கும். அதன்படி 35 வயதுக்குக் கீழே இருக்கும் திருமணமான பெண்கள் மட்டுமே வாடகைத்தாயாக இருக்க முடியும். வாடகைத்தாய் சந்தையில் இந்தியா உலகளவில் கடந்த பத்து வருடங்களாக முன்னணியில் இருக்கிறது, வாடகைத் தாய்க்காக இந்தியாவிற்கு மருத்துவ சுற்றுலா வரும் வெளிநாட்டுத் தம்பதிகள் மிக அதிகம்.

செயற்கை முறை கருத்தரிபில் சில எதிர்மறை விளைவுகள் காணப்பட்டாலும் கூட குழந்தை இல்லை என்ற குறையினை நிவர்த்தி செய்கின்ற வழிமுறைகளாக செயற்கை கருத்தரிப்பு செயன் முறைகள் அமையப் பெறுகின்றன. இக்கருத்தரிப்பு முறை தொடர்பான எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து நேரான சிந்தனைப் பாங்கு கொண்டவர்களாகவும், அவ்வாறான குழந்தைகளை ஆதரிப்பவர்களாக எம்மை மாற்றிக்கொள்வது சிறந்ததாகும்.



# எருமைகளைப் பாதுகாக்கும் தமிழக அரசு



இந்தியாவின் நீலகிரி மலைப் பகுதிகளில் பல நூறு ஆண்டுகளாக வசித்து வரும் தோடர் இன பழங்குடி மக்கள், சமீப ஆண்டுகளில் மோசமான சமிக்ஞை ஒன்றைப் பார்த்து வருகிறார்கள். தங்களது புனித விலங்கான நீளமான, வளைந்த கொம்புகளைக் கொண்ட சாம்பல் நிற எருமைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டதால் அவர்களது இனத்தின் அழிவும் ஆரம்பம் ஆகிவிட்டதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் அழிந்துவரும் கால்நடை பட்டியலிலும் தோடர் இன எருமை சேர்க்கப்பட்டுள்ளது. அதனால், எதிர்காலத்தில் தோடர் இன எருமையின் இனவிருத்தி தேவையைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசின் கால்நடை அமைச்சகம், இந்த எருமைகளின் கருமுட்டைகள் மற்றும் விந்தணுக்களை உறைய வைத்துப் பாதுகாத்து வருகின்றது.

தோடர் எருமைகள் இந்தியாவின் பிற பகுதிகளில் காணப்படுவதில்லை. தமிழ்நாட்டில் கூட, நீலகிரி மலையை தவிர பிற மாவட்டங்களில் இந்த இனம் வளர்வதற்கு உகந்த சூழல் இல்லை என்பதால் இந்த மலையில் மட்டுமே இவை வாழமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாதனை படைத்த வெங்காயம்



இங்கிலாந்து நாட்டில் ஹரோ கேட் நகரில் இலையுதிர்கால மலர் கண்காட்சியையொட்டி காய்கறி போட்டி நடத்தப்படுகிறது. இதில் மிகப்பெரிய அளவிலான காய்கறிகள் மற்றும் மலர்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் இங்கிலாந்து நாட்டின் வடக்கு யார்க்ஷயர் பகுதியை சேர்ந்த தோட்ட விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் விளைந்த மிகப் பெரிய வெங்காயத்தை கொண்டு வந்து காட்சிபடுத்தியுள்ளார்.

அந்த வெங்காயம் 8.97 கிலோ எடைக் கொண்டதாக காணப்பட்டது. இந்த வெங்காயம் உலகிலேயே மிகப் பெரிய வெங்காயம் என்ற உலக சாதனையை படைத்துள்ளது. 2014-ம் ஆண்டு 8.4 கிலோவில் பெரிய வெங்காயம் வளர்க்கப்பட்டதே சாதனையாக இருந்தது.



# தற்கொலைகளால் தடமழியும் தலைமுறைகள்

த.விதுர்ஷன்
மாணவன், கொழும்பு பல்கலைகழகம்.

திரும்பும் திசையெல்லாம் ஆலய கோபரங்களால் ஆசிர்வதிக்கப்பட்ட புண்ணிய திருப்பூமி என எம்மவர் பெருமைப்பட்டு கொள்ளும் தமிழர் தேசம் எங்கும் இளம் தலைமுறைகளின் சிறப்பாக, பல்கலைகழக மாணவர்களின் தொடர்ச்சியான இழப்புகள் கல்விச்சமூகத்தை திணரச்செய்திருக்கிறது. எவனோ எங்கேயோ என கடந்து செல்ல வேண்டிய விடயமாக நாம் இதனை கருதக்கூடாது. இரண்டு நாள் தலைப்பாரம், உடல் சூடு, சளி என அறிகுறிகள் காட்டிக்கொண்டு வரும் நோயல்ல இது, எம்மோடு இன்று சாதாரணமாக கலந்து பேசி சிரித்து வாழ்கின்ற ஒருவர் மறுநாள் இல்லாமல் போகும் சாபநிலை.

**அன்பர்கள் ஒன்றை அறிந்து கொள்ள வேண்டும் ஒரு மனிதனை சக மனிதன் கொல்வது எவ்வளவு பாரதூரமான குற்றமோ!! பாவச்செயலோ!! அதை விட பல மடங்கு பாரிய குற்றம் அல்லது பாவச்செயல்தான் தற்கொலை.**

வேறு நாடுகளை விடுங்கள்! எமது தேசத்தை பொறுத்த வரையில் ஒருவர் கற்றுத்தேர்ந்து பல்கலைக்கழகம் செல்வது என்பது ஒரு தனிமனிதனின் முயற்சி என்பதை தாண்டி ஒரு சமூகத்தின் கூட்டு முயற்சியின் விளைவு. குறித்த மாணவர் தன்சார்ந்தோரின் பிரதி விம்பமாகவே பல்கலைகழகத்திலும் சரி, அதன் பின்னரான எதிர்காலத்திலும் திகழ வேண்டும். அந்த கடமையை ஒவ்வொரு பல்கலைகழக மாணவரும் நெஞ்சில் நன்றாக பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் இழந்து நிற்கின்ற இந்த அருஞ்செல்வங்களின் எதிர்கால பெறுமதி, அவர் சார்ந்தோர் அவரினால் அடையவிருக்கும் பெரும் அடைவுகள் எல்லாம் கணநேரத்தில் தவிடு பொடியாகிறதே! இது எம் சமூகம் இன்று காணும் பேரனர்த்தம். இது இன்று நேற்றல்ல காலம் தோறும் எம் சமூகத்தில் நிகழ்ந்து வரும் அவலநிலை. தற்போது நிகழ்வேகம் அதிகரித்திருக்கிறது.

இதிலிருந்து இளைஞுவர்களை மீட்டெடுப்பதில் இச்சமூகம் தோற்று நிற்கின்றது என்பதை எல்லோரும் ஏற்று கொள்ள வேண்டும். குறிப்பாக சமூக கவலரணாக இருக்க வேண்டிய கல்விச்சமூகம், கல்விச்சமூகத்தில் தம்மை பெரும் ஆளுமையானவராக திகழச்செய்திருக்கும் அனைவரும் வெட்க வேண்டும். மரணம் என்பது சமத்துவமானது அனைவர்க்கும் நிச்சயம் கிடைக்கக் கூடியது, ஆனால் அதை தெரிவு செய்யும் உரிமை எவருக்கும் கிடையாது.

ஒருவர் தற்கொலை செய்வததன் பின்னர் அந்த மாணவனின் குடும்பத்தின் நிலையை சற்று எண்ண வேண்டும். பாலூட்டி உணவூட்டி வளர்த்த தாய், தோளில் போட்டு தாலாட்டி நீ படியென முதுகெலும்பாய் உரம் தந்த தந்தை, பாசமாக நேசமாக உடனிருந்த உடன்பிறப்புகள், உற்ற உறவாடி நம் பலம் இவன் / இவள் என எண்ணியிருந்த உறவுகள், தோழோடு தோள் நின்ற தோழமைகள் இவர்களை சற்று எண்ணி பார்க்க வேண்டும். உங்கள் தாய்க்கு தந்தைக்கு சகோதரர்களுக்கு நீங்கள் ஒரு பிரதியிட முடியாத சொத்து என்பதை ஏன் எண்ண மறுக்கிறீர்கள். ஒரு பல்கலைகழக மாணவர் தற்கொலை செய்கிறார் என்றால் யார் பொறுப்பு? முதலாவது தன் சார்ந்த சமநிலையை அவர் இழக்கிறார்! இரண்டாவது அவரை அப்படி செய்யத்தூண்டிய தூண்டல் காரணி! நாம் அனைவரும் இரண்டாவதாக குறிப்பிட்ட தூண்டல் காரணியை செய்தியாக அறிந்து கடந்து செல்ல மாத்திரமே கற்றுக்கொண்டுள்ளோம். மாற்றாக குறித்த நபரை இவ்வாறான தன் சமநிலை இழப்பிலிருந்து பாதுகாக்க தவறியிருக்கிறோம். ஒரு மாணவரின் அடைவுகளை தலையில் தூக்கி வைத்து கொண்டாடும் அனைத்து கல்வி நிறுவனங்களும் பொறுப்புதாரர்கள்தான். ஒரு மாணவன் தற்கொலை செய்யுமிடத்து அந்த மாணவரின் பாடசாலை தோற்று நிற்கிறது. குறித்த பல்கலைகழகம் தோற்று நிற்கிறது. நாம் கல்விமானர்களை உற்பத்தி செய்கிறோமே தவிர, நல்ல தற்சமநிலை மிக்க மனிதர்களை உற்பத்தி செய்ய தவறுகின்றோம்.



பாடசாலை கல்வி முடித்தால் பல்கலைகழக கல்வி சுலபம் என பொய்யான மனநிலையை மாணவர்களுக்கு வழங்காதீர்கள். படிப்பு மேல்நோக்கி செல்ல செல்ல கடினமானதாகும் அதற்கு கடின

உழைப்புதான் மூலதனம் என சொல்லி கொடுங்கள். வாழ்க்கை கடினமானதுதான் என்ற கசப்பான உண்மையை தெளிவுபடுத்துங்கள் ஆனால் வாழ்வை வெல்ல வல்ல பல வழிகள் இருப்பதனையும் வழிகாட்டிடுங்கள். வயது ஏற ஏற உடல் ரீதியான , உள ரீதியான, குடும்ப மற்றும் சமூக ரீதியான சுமைகளும் பொறுப்புகளும் கனக்கும் என்பதை உதாரணங்களோடு தெளிவுபடுத்துவதோடு அதனை வெல்ல வல்ல வழிகளை காண்பியுங்கள். இவ்வளவு பெரிய உலகத்தில் இன்பத்தை, பொழுது போக்கை, கழிப்பை கைபேசியில் மாத்திரமின்றி சக மனிதர்கள் நாம் வாழும் சூழலில் இருந்தும் பெறலாம் என வழிப்படுத்துங்கள்.


எல்லாவற்றுக்கும் மேலாக பல்கலைகழகம் பல கலை கழகம்தான் என்பதை சொல்லிக்கொடுங்கள். பல்கலைக்கழகத்தில் கிடைக்கும் எல்லா கலைகளும் தேன் இனிப்பாக இராது என்பதை தெரியப்படுத்துங்கள். பல்கலைகழகம் எனும் சமுத்திரத்தை கடக்க பல முதலைகள், திமிங்கிலங்கள், எண்ணற்ற அலைகள் , ஏன் சுனாமியே ஆனாலும் துவண்டு விடாமல் கடந்து வரச்சொல்லிக்கொடுங்கள். குறிப்பாக நீங்கள் பல்கலை வாழ்வில் கடக்கும் வெறும் ஒருசில அலைகள்தான் இந்த அழகு சுந்தர சுந்தரிகள் என்பதை நினைவில் கொள்ள வையுங்கள். பல்கலையில் கற்கும் உங்கள் பிள்ளைகள், உறவுகள், நட்புகளின் நய சுகங்களை அவ்வப்போது கேட்டறியுங்கள், ஆரோக்கியமான உரையாடலுக்கான இடைவெளியை எப்போதும் அவர்களுக்கு வழங்குங்கள்.

மாற்றாக ஒருவர் இறந்த பின் அவரின் அந்தரங்கங்களை அறிந்து செய்திதாள் அச்சிட முயற்சிக்காதீர்கள். நாம் முன்னரே குறிப்பிட்டது போன்று தற்கொலை என்பது வெறுமனே தனி ஒருவரின் செயல்விளைவு அல்ல! அதனை தடுக்க வேண்டியது சமூக பொறுப்பு. பல்கலைகழக சமூகத்தில் ஆறு வருடங்கள் பயணித்தவன் என்ற ரீதியில் பல்கலைகழகங்களுக்குள் இடம்பெறும் முரண்களை நன்கறிவேன். அவ்வாறானவற்றை ஒழிக்க வலுவில்லா விட்டாலும் தவிர்க்கலாம்.

சரி சொல்லி கொடுங்கள், கற்றுக்கொடுங்கள், வழிப் படுத்துங்கள், நினைவில் கொள்ள செய்யுங்கள், காண்பியுங்கள் தெளிவுபடுத்துங்கள் என்கிறேனே!!! நீங்கள் இதனை படர்க்கையாக உணர்கிறீர்களா? உணர்ந்தால் எம் இளையோர் மீண்டெழ காலம் நீடு செல்லும் எனலாம்.

தொடர்ந்து சிந்திப்போம்....






## குற்றம் புரிந்தேன்

“நீங்கள் செய்வது சரியா தந்தையா?”

நல்லைப் பேரவையில் அரச அதிகாரத்தை நோக்கி இப்படியொரு கேள்வியை மாருதவல்லி எழுப்பியிருந்தாள்.

இதற்கு மேலும் அமைதி காப்பது பெருங்குற்றமென உணர்ந்தே அவள் அவையில் அங்ஙனம் கேட்டாள். ஆனால் யாரைப் பார்த்துக் கேட்டாள்?

சிந்தனையில் மூழ்கி இருந்த சங்கிலிய மகாராஜாவின் கண்களை அந்தக் கேள்வி பெரிதாக்கியது.

“என் மகள் என்னையா தந்தை என்று அழைத்தாள்..? இப்பெருஞ்சபையில் நான் செய்வது சரியா என்று இத்தனை தைரியமாக என்னை கேட்டது என் மகளா? அல்லது என் கல்யாணிதேவியே கண்முன் வந்து என்னைப் பார்த்து கேட்கிறாளா?..”

எதுவும் புரியாத குழப்பத்தில் மஞ்சரிதேவியை பார்த்தார் சங்கிலிய மகாராஜா.

உணர்ச்சி மிகுதியில் ஒருவேளை மஞ்சரி தேவி மாருதவல்லியிடம் உண்மையை கூறியிருப்பாரோ என்கிற சந்தேகம் சங்கிலிய மகாராஜா மனதில் தோன்றியது.

ஆனால் மஞ்சரி தேவியின் முகமும் அதே குழப்பத்திலே இருந்ததை கவனித்தார் அரசர்.

உண்மையில் மாருதவல்லியின் கண்கள் மந்திரி ஏகாம்பரம் தொண்டமனாரை நோக்கியே இருந்தன.

“சொல்லுங்கள் தந்தையே.. அரச காரியங்களில் நான் தலையிடக்கூடாது என்பது தங்கள் ஆணை தான். ஆனால் என் தந்தைக்கு இங்ஙனம் பெருங்களங்கம் வருகின்ற போதும் நான் அமைதி கொண்டு தங்கள் ஆணை காக்க முடியுமா? சொல்லுங்கள் தந்தையே.....

தஞ்சை வீரர் எழுதி அனுப்பிய மடலை கேட்டீர்களா? வருணகுலத்தாரின் பெருங்காதலை இப்போதாவது புரிந்து கொண்டீர்களா? தந்தையே, இதற்குப் பிறகும் சித்திராங்கதாவை இங்ஙனம் நாம் நடத்துவது எத்தனை பெரிய குற்றம் என்று அன்று தொட்டு நான் கூறியதன் பொருள் விளங்குகிறதா தந்தையே?”

இராஜமந்திரியாரை பார்த்து அவரது மகள் கேட்ட கேள்விகள் சங்கிலிய மகாராஜாவை எப்படி உருக்குலைத்திருக்கும் என்று சொல்வதற்கில்லை. மன்னரது நா பேசும் திரானியற்று வரண்டு கிடந்தது.

இராஜமந்திரியார் பேசினார்.

“மகளே, தஞ்சை வீரரிற்கு யுத்தத்தில் ஏதாவது நேர்ந்து விட்டதோ என்கிற அச்சம் சாதாரணமானது அல்ல மகளே.. அது நம் தேசத்தையே மீள முடியா களங்கத்தில் மூழ்க வைத்திருக்கும். அப்படியொரு அச்சம் சூழ்ந்த தருணத்தில் எடுத்த முடிவே அதுவாகும். இதில் குற்றம் இருப்பது உண்மைதான். ஆனால் அந்த நேரத்து நியாயத்தையே நாம் ஆற்றினோம் மகளே..”

“இல்லை மந்திரியாரே.. இல்லை..”

சங்கிலிய மகாராஜா அதை ஆவேசமாக மறுத்தார்.

“இதில் எந்த நியாயமும் இல்லை என்பதே உண்மையாகும்.”

அவையோர் வியந்து அரசரை நோக்கினர்.

“ஆம் இராஜமந்திரியாரே.. வருணகுலத்தானை தவறான வழிக்கு அழைத்துச் சென்றாள் என்றே குற்றம் சுமத்தி சித்திராங்கதாவை சிறைபிடித்தோம். அரண்மனை விசுவாசியான பெருவணிகரது மகளை இங்ஙனம் சிறைபிடிக்க நாம் சிறிதும் தயங்காமைக்கு காரணம் பெருவணிகர் அன்று சொன்ன வார்த்தைதான். என் மகளை சிறைபிடித்தாவது காத்தருளுங்கள் என்று வேண்டியது பெருவணிகர் தான். ஆனால் மாவீரர் வருணகுலத்தானது உள்ளத்தில் உள்ளது பற்றி நாம் சிறிதும் சிந்திக்க வில்லையே இராஜமந்திரியாரே..

இப்படியொரு செயல் சித்தி ராங்கதாவிற்கு நாம் இழைத்ததாய்

அறிந்தால் தஞ்சைவீரர் எங்ஙனம் வேதனை கொள்வார் என்பதை எண்ணிப் பார்க்கவே என் மீதுள்ள குற்றம் என்னைக் கொல்கிறது மந்திரியாரே.. பெருங்குற்றம் ஆற்றியது நான்தான் மந்திரியாரே.. கல்யாணி தேவியின் கண்கள் என் உள்ளத்தில் முள்ளாய் நின்று குத்தி என்னை நோக்குகின்றன.. நான் என்ன பதில் சொல்லுவேன் இப்போது...?"

பெருஞ்சபையில் கலங்கி நின்றார் சங்கிலிய மகாராஜா. ஓடி வந்து அரசர் கரங்களை பற்றி தேற்றினார் மஞ்சரிதேவி.

இராஜமந்திரியார் எழுந்து பேசினார்.

"அரசே.... தஞ்சைவீரரே தற்சமயம் எம் பெருஞ் சொத்து. அவரிற்கு ஆபத்து சூழ்ந்துவிட்டது என்கிற தருணத்தில் நாம் எந்த நியாயத்தை பற்றியும் சிந்திக்காமல் செயற்பட்டது உண்மைதான். தஞ்சை வீரரது காதல் பற்றியும் நாம் அறியாமல் அல்ல. ஆனால் மோக வலையில் தஞ்சை வீரரை எதிரிகள் சிக்கவைத்ததாகவே எம் புரிதல் இருந்தது. அது உண்மையில்லை என்பதை இப்போதே புரிந்து கொண்டோம். வருணகுலத்தான் பெருங்காதலுக்கு மதிப்பளிக்க இந்த சபை கடன் பட்டிருக்கிறது. சித்திராங்கதாவை உடன் விடுவிக்க வேண்டும். மேலும் வருணகுலத்தான் வெற்றிவாகை சூடி வரும் வரை சித்திராங்கதாவை காப்பதும் இன்று முதல் எம் பணியே. சித்திராங்கதாவை அந்தப்புரத்தில் அதிக வசதியுடன் ஈழத்தின் பெருஞ் சொத்தாய் பேணிக்காக்க நாம் ஆகுதி செய்ய வேண்டும். அதற்கான ஆயத்தங்களை விரைந்து நோக்க வேண்டும் வேந்தே.."

அதுவரை சபைநடுவே எந்த சலனமும் இல்லாமல் வருணகுலத்தானது ஓலையோடு வந்த பெட்டியை உற்றுப்பார்த்த வண்ணம் இருந்த சித்திராங்கதா மந்திரியாரது வார்த்தைகள் கேட்டு அவசரமாக தலை நிமிர்ந்தாள்.

*தொடர்வாள்...*





ப. டியனி

# ஆச்சரியப்படுத்தும் நான்காம் கைத்தொழில் புரட்சி

1980 களில் நாம் மிக ஆவலுடன் பார்த்து மகிழ்ந்திருந்த தொலைக்காட்சி நாடகத் தொடர் நைட்ரைடர் (Knight Rider) ஆகும். இதில் தோன்றும் கதாநாயகன் (மைக்கேல்), தானாக இயங்கும் காருடன் (கிட்) நிகழ்த்தும் சாதனைகளை நாம் வாய் பிளந்து பார்த்ததுண்டு. கிட் என்ற அந்த தன்னியக்க கார், கதாநாயகனுக்கு ஒரு பிரத்தியேக உதவியாளர் போன்றும் செயற்படும். இன்னொரு திரைப்படமொன்றில் கதாநாயகன் நடந்து கொண்டே சொல்லும் விடயங்களை மேசையில் உள்ள தட்டச்சு இயந்திரம் தானாக அவற்றை தட்டச்சு செய்து கொண்டிருக்கும். இவை போன்ற பலவிடயங்களை கடந்த கால திரைப்படங்களில், நாவல்களில், கற்பனை செய்திருப்பார்கள். இவற்றையெல்லாம் பார்த்தபோது, மாயாஜாலக் கதைகளாகவே நாம் அவற்றை கடந்து வந்திருந்தோம். இவையெல்லாம் நிஜத்தில் நடக்கின்ற காரியங்களா என எண்ணாமலும் இல்லை. எனினும், இன்று நிஜத்தில் தானாக இயங்கும் கார், பிரத்தியேக உதவியாளராக செயற்படக்கூடிய அலஸ்கா போன்ற டிஜிட்டல் உபகரணங்கள், உரையாடலை தன்னியக்கமாக டைப் செய்தல் போன்றன நாம் அன்றாடம் காணும் சாதாரண நிகழ்வுகளாகி வருகின்றன. உலகின் அசூர வளர்ச்சி கண்டுள்ள தொழினுட்பத்தின் காரணமாக இவை சாத்தியமாகி வருகின்றன. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு, தன்னியக்க தொழினுட்பம் மற்றும் இயந்திர கற்றல் ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக மனிதர்கள் செய்யக் கூடிய விடயங்கள் பலவற்றை இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் செய்யத் தொடங்கியுள்ளதைக் காண முடிகிறது. இதுவே உலகின் நான்காம் கைத்தொழில் புரட்சி எனப்படுகிறது.


நான்காவது கைத்தொழில் புரட்சி என்பது பாரம்பரிய தொழில்களின் தொடர்ச்சியான மாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), தன்னியக்கம் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பைக் குறிக்கிறது. கைத்தொழில் வளர்ச்சியின் இந்த புதிய சகாப்தம் முந்தைய மூன்று கைத்தொழில் புரட்சிகளை அடிப்படையாகக் கொண்டது: முதலாவது, 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைமுறை உழைப்பிலிருந்து இயந்திரமயமாக்கலுக்கு மாறியது. இரண்டாவது, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாரியளவிலான உற்பத்தி முறைகளைக் கொண்டு வந்தது. மற்றும் மூன்றாவது, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கணினிகள் மற்றும் தன்னியக்கம் எனும் ஆட்டோமேஷனின் வருகையைக் கண்டுள்ளது. எனவே, நான்காம் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கு மிகு நுட்பங்களாக செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence), இயந்திர கற்றல் (Machine Learning) மற்றும் ஆட்டோமேஷன் (Automation) அல்லது தன்னியக்க தொழினுட்பம் ஆகியற்றை குறிப்பிட்டுக் கூறலாம். செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence), இயந்திர கற்றல் (Machine learning) மற்றும் தன்னியக்க தொழினுட்பம் (Automation) ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய எண்ணக்கருக்கள் ஆகும். இவை எமது வாழ்க்கை முறைகளை மற்றும் வேலை செய்யும் முறைகளை விரைவாக மாற்றுகின்றன. இவை பெரும்பாலும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்பு கொண்டவையாகும். இவற்றை தனித்தனியாக எடுத்து நோக்கும் போது, ஒவ்வொன்றும் தனித்துவமான தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாடுகளைக் கொண்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு என்பது இயந்திரங்கள், குறிப்பாக கணினி முறைமைகள் மூலம் மனித நுண்ணறிவு செயன்முறைகளை உருவகப் படுத்துவதாகும். அதாவது, கணணி முறைமைகள் மூலம், மனிதர்களின் செயற்பாடுகளையொத்த நடவடிக் கைகளில் இயந்திரங்கள், உபகரணங்களை செயற்படுத்தும் முறையினை இது குறித்து நிற்கிறது.

இது பொதுவாக மனித நுண்ணறிவு தேவைப்படும் பகுத்தறிவு, கற்றல் மற்றும் பிரச்சினைத் தீர்த்தல் போன்ற பணிகளைச் செய்யக்கூடிய இயந்திரங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. விதி-



அடிப்படையிலான முறைமைகள் (rule-based systems), இயற்கை மொழி செயலாக்கம் (natural language processing) மற்றும் கணணி நோக்கு (computer vision) ஆகிய நுட்பங்களை கொண்டு இது இயங்குவதாக உள்ளது. இயந்திர கற்றல் என்பது செயற்கை நுண்ணறிவின் உபகுழு ஆகும், இது வடிவங்களை அடையாளம் காணவும் தரவின் அடிப்படையில் எதிர்வு கூறல்களை உருவாக்கவும் பயிற்சி வழிமுறைகளை உள்ளடக்கியது. ஒரு மாதிரியுருவில் அதிகளவிலான அளவிலான தரவை இடுவதன் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. இத்தகைய மாதிரி உரு தரவுகளுக்கு இடையில் தொடர்புகளை அடையாளம் கண்டு வடிவங்களை உருவாக்கவும், அந்த வடிவங்களின் அடிப்படையில் எதிர்வு கூறல்களைச் செய்யவும் கற்றுக்கொள்கிறது. இத்தகைய மாதிரியுருக்களில் அதிகமதிகம் தரவுகளை இடுவதன் மூலம், மிகவும் துல்லியமான மற்றும் அதி நவீன எதிர்வு கூறல்களைச் செய்ய முடியுமாக இருக்கும். தன்னியக்கமாக்கல் என்பது மீண்டும் மீண்டும் நிகழும் அல்லது சாதாரணமான பணிகளை தானியக்கமாக்குவதற்கு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இது உற்பத்தி செயன்முறைகள் முதல் வாடிக்கையாளர் சேவை தொடர்புகள் வரை அனைத்தையும் உள்ளடக்கிறது.


ரோபோக்கள், சாட்போட்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவின் பிற வடிவங்கள் உட்பட பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இத்தகைய ஆட்டோமேஷனை நிறைவேற்றலாம். இந்த மூன்று தொழில்நுட்பங்களின் கலவையானது பரந்த அளவிலான தொழில்கள் மற்றும் தொழில்களை மாற்றுகிறது. எடுத்துக்காட்டாக, மருத்துவத்துறையில், செயற்கை நுண்ணறிவுடன் இயங்கும் கண்டறியும் கருவிகள் மருத்துவர்களுக்கு மிகவும் துல்லியமான நோயறிதல்களைச் செய்வதற்கும் மிகவும் பயனுள்ள சிகிச்சைத் திட்டங்களை உருவாக்குவதற்கும் உதவுகின்றன. நிதித்துறையில், இயந்திர கற்றல் வழிமுறைகள், பரந்த அளவிலான தரவுகளை பகுப்பாய்வு செய்யவும், முதலீட்டாளர்கள் அதிக தகவலறிந்த முடிவுகளை எடுக்க



உதவும் வடிவங்களை அடையாளம் காணவும் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தியில், தானியங்கு தொழில்நுட்பங்கள் உற்பத்தி செயன்முறைகளை ஒழுங்குபடுத்தவும் மனித உழைப்பின் தேவையை குறைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

போக்குவரத்தில், சுயமாக ஓட்டும் கார்கள் மற்றும் டிரக்குகள் உலகெங்கிலும் உள்ள பொருட்களையும் மக்களையும் நகர்த்துவதில் புரட்சியை ஏற்படுத்த தயாராக உள்ளன. இருப்பினும், எந்தவொரு புதிய தொழில்நுட்பத்தையும் போலவே, AI, ML மற்றும் தன்னியக்க தொழினுட்பம் தொடர்புடைய அபாயங்கள் மற்றும் சவால்களும் உள்ளன. குறிப்பாக இவற்றின் அசுர வளர்ச்சி மனித வேலைவாய்ப்புக்களில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் ஆகும். இவை, மனிதர்களின் சம்பிரதாயபூர்வமான வேலைகளை குறைக்கச் செய்வதுடன். பல புதிய வேலைவாய்ப்புகளுக்கான தேவைகளையும் உருவாக்குகின்றன. அதேபோன்று, மனித அழிவுகளுக்கு இட்டு செல்லும் வழிகளிலும் இந்த தொழில்நுட்பங்களை மனிதர்கள் பயன்படுத்தும் அபாயமும் இல்லாமலில்லை.

இந்த அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கும், AI, ML மற்றும் தன்னியக்க தொழினுட்பம் ஆகியவை சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் வழிகளில் பயன் படுத் தப் படு வ தை உறுதி செய்வதற்கும், முறையான ஒழுக்கநெறிமுறை வழிகாட்டுதல்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன. இதில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகள், அத்துடன் இந்த தொழில்நுட்பங்களின் பொறுப்பான மேம்பாடு போன்றவற்றுக்கான வழிகாட்டுதல்களும் இருக்க வேண்டும். முடிவில், செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் மற்றும் தன்னியக்க தொழினுட்பம் ஆகியவை நாம் வாழும் மற்றும் வேலைசெய்யும் முறையை மாற்றியமைக்கின்றன. இவை சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை கொண்டு வரமுடியும். எனினும், இத்தொழில்நுட்பங்களை எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் அணுகுவது முக்கியம், அவை பாதுகாப்பான, நெறிமுறை மற்றும் அனைவருக்கும் நன்மை பயக்கும் வழிகளில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.



# ஒளிரும் கடல்

அமெரிக்காவின் தெற்கு கலிஃபோர்னியா மாகாணத்தில் கடல் நீல நிறத்தில் ஒளிர்கிறது. Bioluminescence’ எனப்படும் ஒரு இயற்கை நிகழ்வு கடலை நீல நிறத்தில் ஒளிர செய்கிறது.

இந்த ஒளிரும் கடற்கரைக்குப் பின்னால் பைட்டோபிளாங்க்டன் அல்லது பிளாங்க்டன் எனப்படும் நுண்ணுயிர்கள் ஈடுபட்டுள்ளதைத் தவிர வேறு எந்த இரகசியமும் இல்லை.

இருளில் ஒளிரும் இந்த ஒளியானது அடிப்படையில் “பயோலுமினென்சென்ஸ்” எனப்படும் மிதவை உயிரிகளால் நடக்கக்கூடிய இயற்கையான நிகழ்வாகும். மிதவை உயிரிகள் என்பவை வேறொன்றும் இல்லை. அவை நம் கண்ணுக்குத் தெரியாத பாசி வகைகள்தான்.

இந்த மிதவை உயிரிகளில் சில ஒளிரும் தன்மை கொண்டவை. பாசிகளின் உள்ளே நிகழும் வேதியியல் மாற்றத்தால் ஒளி உண்டாகிறது. இந்த நீர்வாழ் நுண்ணுயிரிகள் கடலுக்கு அடியில் துடிப்பான நீல ஒளியை பரப்புகின்றன.

நீர்வாழ் நுண்ணியிர்களின் விளைவால் நீலநிற ஒளி ஏற்படுவதால் கடற்கரை மணலிலும் அதனை காண முடிகிறது. அந்த கடல் நீரில் பாதங்களை நனைத்த பிறகு வைக்கும் சுவடுகளில் நீல நிறத்திலானவையை பார்க்க முடியும் என்கிறார்கள்.

மேலும் இந்த தகவல் பரவியதும் பலரும் ஒளிரும் கடலை காண கடற்கரைக்கு படையெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





சு.கோவிந்தனி
யோ. தட்ஷாயினி
உளவியல் துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

# விற்பனைப் பொருளாகும் உடல்

மனிதனால் தனித்து வாழ முடியாது. அவன் ஏதோ ஒரு வகையில் ஏனைய சமூக உறவுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை காணப்படும். மனிதனது உடல்,உள தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்கு அமைய திருமணம் என்ற ஒரு உன்னதமான பந்தம் நிச்சயிக்கப்படுகின்றது. திருமணத்தை தாண்டி ஒரு ஆணும் பெண்ணும் வெவ்வேறு நபர்களுடன் கொண்டுள்ள உடல் ரீதியான உறவு முறையை விபச்சாரம் எனப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக விபச்சாரம் என்பது பாலியல் உறவுகளை அடிக்கடி மாற்றுவது என்று கூறலாம் அதாவது உணர்ச்சிபூர்வமான உறவை உருவாக்க முயற்சிக்காமல் பாலியல் தேவையை மட்டும் பூர்த்தி செய்ய முற்படுவதாகும்.

ஆரம்ப காலத்தில் பெண்கள் மட்டும் விபச்சாரத்திற்கு சம்பந்தப் பட்டவர்களாக காணப்பட்டனர். ஆனால் தற்காலத்தில் பொருளாதார நோக்கத்திற்காக ஆண்களும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பது அண்மைக்கால தகவல்களாகவும் ஆச்சரிய தன்மையை ஏற்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. 20-40 வயதுடைய ஆண்கள் Male Escort எனும் பெயர்களை கொண்ட இணையத்தளங்களில் தம்மை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த விபச்சாரமானது குடும்ப வாழ்வை மற்றும் சமூக வாழ்வை அச்சுறுத்தும் ஒரு துர்நடத்தையாக காணப்படுகின்றது. விபச்சாரம் தன்னின சேர்க்கை முதலான முறைகேடான ஆண்- பெண் உறவுகள் குடும்பம் என்ற சிறிய

சமூகத்தை தகர்க்கக் கூடியவை ஆகும். விபச்சாரம் என்பது இயற்கை நீடிக்கும் இறை நியதிக்கும் முரணான அமைதியை சீர்குலைத்து சமுதாயத்தை சீரழிக்கும் ஒரு செயலாக பார்க்கப்படுகின்றது. விபச்சாரத்தில் திருமணமானவர்கள் மற்றும் திருமணமாகாதவர்கள் ஈடுபடுகின்றார்கள். சில நாடுகளில் இதனை சட்டபூர்வமாக அங்கீகரிக்கின்றனர். நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பங்களாதேஷ், பெல்ஜியம், இந்தியா (அண்மை காலத்தில் இந்தியாவில் விபச்சாரம் என்பது குற்றமாகாது என உச்ச நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது)

## விபச்சாரத்தில் ஈடுபடுவதற்கான காரணங்கள்

### 1. பொருளாதார தேவை

குடும்ப வறுமை, தற்கால பணத் தேவைபோன்ற காரணங்களினால் இதனை தொழிலாக மேற்கொள்கின்றார்கள். அத்தோடு வறுமையான நாடுகளிலும் இந்த விபச்சாரமானது ஏற்றுக் கொள்ளப்பட்டதாக காணப்படுகின்றது.

### 2. திருமணத்தில் மகிழ்ச்சியின்மை.

ஏமாற்றும் கணவன் அல்லது மனைவி, தங்கள் மனைவி சொல்வதைக் கேட்கவில்லை, தன் மீது அக்கறை இல்லை, அன்பு இல்லை போன்ற காரணங்களால் விபச்சாரத்தில் ஈடுபட்டு அதனை நியாயப்படுத்துகின்றார்கள்.

### 3. சலிப்பு அல்லது தேவை

காலம் செல்ல செல்ல திருமணங்கள் வழக்கமானதாக உணர ஆரம்பிக்கின்றன. இதனால் பழக்கமான திருமணத்தில் அதிருப்தி ஏற்படலாம் இதனால் புதிய ஒரு உறவை சந்திக்க நேரிடுகின்றது.

### 4. பழி வாங்குதல்

ஏமாற்றும் கணவனும் மனைவியும் விபச்சாரத்தில் ஈடுபடலாம். அதாவது ஒரு திருமணமான பெண் அல்லது ஆணுக்கு தங்கள் துணைக்கும் சக ஊழியர்களுக்கும் தொடர்பு இருப்பதை அறிந்தால் அவர்கள் திருமணத்திற்கு புறம்பான உறவில் நுழைவதன் மூலம் பதிலளிக்கின்றார்கள்.

### 5. பாலியல் திருப்தி இன்மை

ஏமாற்றும் நபரின் தற்போதைய திருமணத்தில் பாலியல் திருப்தி இல்லாததால் விபச்சாரத்தில் ஈடுபட இவர்கள் தூண்டப்படுகின்றார்கள்.

கடந்த கால அதிர்ச்சி, அதிக பாலியல் ஆர்வம், மன அழுத்தத்தை சமாளிப்பதில் ஏற்படும் சிரமம் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.



## விபச்சாரத்தில் ஈடுபடுவதனால் ஏற்படும் விளைவுகள்.

1. பாலியல் நோய்களுக்கு உள்ளாதல்.
2. சமூகத்தில் பிளவு ஏற்படும். நுப.விவாகரத்து.
3. சமூக நெறிமுறைகளும் கலாச்சாரங்களும் பாதிக்கப்படல்.
4. கணவன் மனைவிகளுக்கிடையே நம்பிக்கையற்ற தன்மை.
5. தனிமை.

## கையாளும் வழிமுறைகள்

மதம் சார்ந்து கையாளல் முறைகள் விபச்சாரம் என்பது இஸ்லாமிய நோக்கில் மிகப் பெரிய பாவமும் குற்றச் செயலுமாகும். இஸ்லாம் விபச்சாரத்தை மட்டுமின்றி அதற்குத் தூண்டுதல் வழங்குகின்ற அனைத்தையும் விலக்கியுள்ளது. விபச்சாரத்தை ஆகக் கொடிய தண்டனை வழங்கப்பட வேண்டிய குற்றமாக இஸ்லாம் கருதுகின்றது. இஸ்லாமிய ரீஅத் அமுலில் உள்ள இடத்தில் ஓர் ஆணோ பெண்ணோ விபச்சாரம் புரிந்தால் அவருக்குக் கல்லெறிந்து கொல்லும் தண்டனை வழங்கப்பட வேண்டும், திருமணமாகாதவருக்கு தலா நூறு கசையடி வழங்கப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் தீர்ப்பாகும்.



“(நம்பிக்கை கொண்டோரே!) நீங்கள் விபசாரத்திற்கு நெருங்காதீர்கள் அது மானக் கேடானதாகும். மேலும் (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீயவழியாகவும் இருக்கின்றது.” (17:32)

என்று இஸ்லாம் மதம் கூறுகின்றது.

## அறிகை சிகிச்சை

எமது அறிகைச் செயன்முறையானது எமது திட்டங்கள், சிந்தனைகள், புலக்காட்சி, ஞாபகம், நம்பிக்கை, மனப்பான்மை என்பவற்றைக் கொண்டதாகும். இவற்றில் ஒன்றோ பலவோ ஒருவருக்கு எதிரானதாக அமையும் போது அவர் பல்வேறு உளப்பாதிப்புக்கு உள்ளாகின்றார். இதனால் பதகளிப்பு, ஒழுங்கீனங்கள்(Anxiety disorders), மனச்சோர்வு(Depression) என்பனவற்றுடன் சில உடலியல் ஒழுங்கீனங்களும் (Physical disorders) ஏற்படலாம். இந்த நிலைமையை புரிந்து கொள்ளும் அறிகைச் சிகிச்சையாளர்கள் அவரது சமகால சிந்தனையை சில நுட்பங்களைப் பிரயோகித்து நேரானதாக மாற்றி அமைக்கும் போது எதிர்காலத்தில் அவரது நம்பிக்கைகள், நடத்தைகள், எண்ணங்கள் என்பன நேராகவும், யதார்த்தமாகவும் அமையும் என்பதனூடாக வழங்கமுடியும்.

## நடத்தைச் சிகிச்சை

நடத்தைச் சிகிச்சையின் நோக்கம் ஒருவரது தவறான நடத்தையை சரியாக மாற்றி வடிவமைத்தலாகும். அத்துடன் தேவையற்ற நடத்தைகளை இல்லாமல் செய்வதும் நல்ல நடத்தைகளைத் தூண்டி மேலும் சிறப்பாக வடிவமைத்தலுமாகும். இதற்கு மீள்வலுவூட்டல் நுட்பங்கள் பயன்படுத்தி கையாள முடியும்.

## அறிகை நடத்தைச் சிகிச்சை

அறிகை நடத்தைச் சிகிச்சையானது உளவியலாளர்களான ஏரோன்பெக், அல்பேட் எலிஸ் ஆகியோரால் 1960களில் முன்வைக்கப்பட்டது. இச் சிகிச்சையின் அடிப்படையான நோக்கம் தனிநபரின் அறிகை, நடத்தை ஆகிய இரண்டையும் ஒன்றிணைந்த முறையில் மாற்றி அமைத்தலாகும். இச் சிகிச்சை முறைக்குள் அறிகை சிகிச்சை, நடத்தை சிகிச்சை ஆகிய இரண்டு கருத்துக்களும் உள்ளடங்குகின்றது. இச் சிகிச்சையானது ஒரு நபருக்குள் ஏற்படும் எதிர்மறையான எண்ணங்கள், பொருத்தமற்ற நடத்தைகள், குழப்பமான மனநிலைகள், பகுத்தறிவற்ற சிந்தனைக் கோலம் என்பவற்றை “தானாகத் தோன்றும் எண்ணம்” என அழைக்கின்றது. இப்படியான தானாகத் தோன்றும் எண்ணங்களால்தான் மனிதர்கள் பலர் மனநிலைப் பிறழ்வுகளுக்கும், உள நோய்களுக்கும் உள்ளாகின்றனர் என்பதே இக்கொள்கை முன்வைப்பாளர்களின் கருத்தாகும்.

அறிகை □ நடத்தை இரண்டினதும் இணைப்பே அறிகை நடத்தைச் சிகிச்சை (Cognitive Behavior Therapy) ஆகும். இவ் இரு சிகிச்சையினதும் நுட்பங்கள், கொள்கைகள், ஆய்வுகள், அணுகுமுறைகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு இரண்டின் கலவையாக உருவாக்கப்பட்டதே அறிகை நடத்தை சிகிச்சை ஆகும். இதற்குள் பொருத்தமற்ற நடத்தை (Maladaptive Behavior), அறிகைச் செயன்முறை(Cognitive Process) என்பன உள்ளடங்கியுள்ளது. இச் சிகிச்சை முக்கியமாக துணைநாடியின் பிரச்சினை, செயற்பாடு.

இச் சிகிச்சை வாழ்வில் நடக்கும் எதிரான நிகழ்வுகளை தனிமனிதன் சவாலாக எடுக்க உதவுகின்றது. தவறான சிந்தனைகள் (Error Thinking) வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளை பொதுமையாக்கம் செய்யவும் (Overgeneralizing), எதிர்மறையானவற்றை பெரிதுபடுத்திப் பார்க்கவும் (Maximize negative), நேரானவற்றைக் குறைத்து மதிப்பிடவும் (Minimizing positive) வழிவகுக்கின்றது. எனவே இவற்றை மாற்றியமைத்து துன்பமான, தோல்வியான, ஏமாற்றமான மனநிலையைக் குறைத்து மதிப்பிட



அல்லது அவற்றை இலேசாக எடுத்துக்கொள்ள (Decreasing emotional distress and self-defeating behavior) அறிகை நடத்தைச் சிகிச்சையால் உதவமுடியும்.

## விழிப்புணர்வு வழங்கல்

பணத்தை சம்பாதிப்பதற்கான ஒரு வழியாக பலராலும் நோக்கப்படுகின்றது. இதில் ஈடுபடுபவர்களை சமூகம் எவ்வாறு நோக்குமென்ற தெளிவினையும், இதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய ஆலோசனைகளையும் வழங்குதல் மூலம் இதனைக் கையாள முடியும். மேலும் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர், சிறுமிகள் தற்காலத்தில் கட்டாயத்தின் அடிப்படையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதற்கு காரணம் குடும்ப வறுமை ,தாய், தந்தையை இழந்து பாரமரிப்பின்றி வாழும் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபடுவது அதிக அளவில் காணப்படுகின்றது. இவ்வாறான பிள்ளைகளை இனம் கண்டு அவர்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு வழி காட்டுவது அவசியம் ஆகும். மனித உரிமை அமைப்பு ,மகளிர் சங்கம், உளநல அமைப்புக்கள் போன்றன பாலிய தொழில் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகள் போன்றவற்றை மேற்கொள்வது இதற்கு தீர்வாக அமையும். இளம்பராயத்தினரை பாலியல் தொழில் ஈடுபடும் சமூகத்திலிருந்து மீட்டெடுத்து சிறந்ததொரு சூழலை உருவாக்கிக் கொடுத்தல் அவர்களது எதிர்காலத்திற்கு சிறப்பானதாகும். பாடசாலைகளில் பாலியல் தொடர்பான விளக்கங்களை ஏற்படுத்துவதன் மூலம் இது பற்றிய தெளிவினையும், ஆனால் ஏற்படும் ஆபத்துக்களையும் கண்டறிந்து அதிலிருந்து விலகிக்கொள்ளக் கூடியதாக அமையும்.

ஆரம்ப காலத்தில் பெண்கள் மட்டும் விபச்சாரத்திற்கு சம்பந்தப்பட்டவர்களாக காணப்பட்ட அதே வேளை தற்காலத்தில் பால் வேறுபாடின்று உருவெடுத்து வருகின்றன. பாலியல் கல்வி தொடர்பான அவசியம் அனைவருக்கும் ஏற்படுத்துவதன் மூலம் பாலியல் தொழில் என்ற ஒன்றை இல்லாது ஒழிக்க முடியும்.



தி. திவிகா
மெய்யியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்



# கலைப் படைப்பிற்கும் அழகு எனும் எண்ணக்கருக்கும் இடையிலான தொடர்பு

கலைப்படைப்புக்கள் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். சிறுகதை, கவிதை, ஓவியம், பாடல், கூத்து எனப் பல கலைப்படைப்புக்களை கண்டு இரசித்துள்ளோம். கலை என்ற சொல் மூன்று விதமான பொருள்களில் வழங்கப்பட்டு வருகிறது எனக் கலைக்களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது. அழகியல் பொருள்கள் படைத்தல், செயற்கையாகப் பொருள்களைச் செய்தல், மனதில் தோன்றும் அழகுணர்ச்சியைக் குறித்தல் ஆகியனவே மேற்கூறப்பட்ட மூன்று விதமான பொருள்களாகும். கலைப் படைப்பு என்பது செயற்கையாக கலைஞனால் மேற்கொள்ளப்படும் ஒன்றாகும். உண்மையில் இயற்கையாக உள்ள மலைகள், நதிகள் போன்றவற்றை நாம் இயற்கைப் பொருட்கள் என்றே சொல்கிறோம். அவற்றினை மாறாக கலைப்படைப்புகள் என்று சொல்வதில்லை.

கலைப்படைப்புக்கள் செய்பண்டங்கள் ஆகும். ஒரு பொருளை கலைப்படைப்பென அழைப்பதற்குரிய ஆகக் குறைந்தபட்ச நிபந்தனைகள் பற்றி ஆராய்ந்தோரில் ஜோர்ஜ் டிக்கி (George Dickie) குறிப்பிடத்தக்கவர். இவர் “கலை” எனப் பெயரிட்டழைப்பதற்கு அப்பொருள் செய் பண்டமாயிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை வலியுறுத்தியுள்ளார். இந்தவகையில் கலைப்படைப்புக்கள் செயற்கையானவை என்பதனைப் புரிந்துகொள்ள முடியும். அனைத்து செய்பண்டங்களையும் “கலை” என்று பெயரிட்டு அழைக்க முடியுமா? எனும் வினா எழுகிறது. ஏனெனில் கலைஞன் அல்லாத வினைத்திறனான

திறமை கொண்ட மனிதர்களால் அன்றாடம் நாம் உபயோகிக்கும் பாவனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றினை கலைப்படைப்புக்கள் என்று பெயரிட்டழைக்க முடியாது மாறாக அவை அனைத்தும் விற்பனைப் பொருட்களாகும். இதிலிருந்து கலைகள் அனைத்தும் செய்பண்டங்களாகும். மாறாக செய்பண்டங்கள் அனைத்தும் கலைகளாவதில்லை என்பதனை முடிவாகப் பெற முடியும்.

அழகியல் சார்ந்த பொருட்களைப் படைப்புச் செய்தலே கலைப்படைப்பு எனவும் கூறிக்கொள்ள வேண்டும். பிறாங்சிப்லி என்பவர் கலைக்கண் கொண்ட காட்சியின் போது இரசனையும், மதிப்பீடும் தொடர்புபடுகின்றன என்கிறார். இவ்வாறாகக் கலைப்படைப்புக்களில் இருந்து காட்சியின் வாயிலாகப் பெறப்படும் அனுபவம் அழகியல் சார்ந்ததாகும். இந்தவகையில் அழகியல் இன்பத்தினைத் தருவதே கலைப்படைப்பாகும். கலைப்படைப்புக்கள் காட்சியின் வாயிலாகவே நுகரப்படுகின்றன.



கலைக்கண் கொண்ட காட்சியானது சாதாரண காட்சியிலிருந்து பெரிதும் வேறுபட்டது.

கலைப் படைப்புகளிற்கிடையே பொதுப்படையான பண்புகளை உருவாக்குவதிலுள்ள இடர்பாடுகள், காலத்திற்குக் காலம் “கலை” பற்றிய கருத்துக்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், கலைப்பொருட்களை இனங்காண்பதிலுள்ள சிரமங்கள் ஆகியவை காரணமாக கலை பற்றிய தீர்க்கமான வரைவிலக்கணத்தையோ விளக்கத்தினையோ முன்வைப்பதில் சர்ச்சைகள் சிரமங்கள் ஏற்படுகின்றன. கலைப்பொருளும் அழகு எனும் எண்ணக்கருவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகும். மானிடர் இயற்கைப் பொருட்களான சூரியன், சந்திரன், வானம், மேகம், மலைகள், நதிகள் ஆகியவற்றிலிருந்து அழகினைக் கண்டுணர்கிறனர். இவ்வழகு இயற்கையழகு என அழைக்கப்படுகிறது. அதேபோல் மனிதன் தன் செயலைக் கொண்டு செய்பண்டங்களான கலைகளை உருவாக்குகிறான். அவற்றில் ஒவ்வொருவரும் காணும் அழகு செயற்கையழகு ஆகும்.

பொதுவில் “அழகு” என்பதற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கம் ஒன்றினைப் பெறுதல் கடினமானது. ஏனெனில் அழகு என்பது ஒவ்வொரு நபரினதும் மனதினைச் சார்ந்த ஒன்றாகும். Grube (1927) என்பவர் கிரேக்க கலாசாரத்தில் “அழகு” மானுடமையத்தை மையமாகக் கொண்ட உடல் கவர்ச்சியைக் குறிக்கிறது எனக்

குறிப்பிட்டுள்ளமையினை எடுத்து நோக்குவது அவசியமானது.

கலைப்பொருளினை இரசிப்பவர் நுகர்வோர் அல்லது சுவைஞர் எனப்படுவார். நுகர்வோர் கலைப்பொருளை இரசிப்பதற்கான காரணம் அப்பொருளில் அழகினை கண்டுகொண்டமையாக இருக்கலாம். றிச்சேட் பிறைஸ் “அழகு பார்க்கும் பொருளிடத்தே உள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக, “சிகிரியாக் குன்றில் காசியப்ப மன்னனால் வரையப்பட்ட ஓவியங்கள் அழகானவை” எனும் கூற்று பொதுவில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். இக்கூற்று கலைப்பொருளை மையமாகக் கொண்டு அழகினை சுவைஞன் பெறுகிறான் என்பதனை தெளிவுபடுத்திக் காட்டுகிறது.

கலைஞன் கலைப்பொருளைப் படைப்புச் செய்யும் பொழுது சில சமயங்களில் அக் கலைக்கே உரிய அமைப்பு முறைகளைப் பின்பற்றுவது அவசியமானது. எடுத்துக்காட்டாக, ஆரம்பத்திலும் தற்காலங்களிலும் ஆலயங்களில் தேர் செய்யும் சிற்பிகள் தேரின் வடிவ அளவுத்திட்டத்திற்கு ஏற்பவே தேரினைச் செய்வதனைக் குறிப்பிடலாம். ஏனெனில் தேரின் அழகு அதன் சரியான அளவுத் திட்டத்திலேயே தங்கியுள்ளது. தற்காலத்தில் மரபுவழிக் கவிதையினைத் தழுவாத புதுக்கவிதை எழுதும் மரபும் வளர்ந்துள்ளது. இங்கு எவ்வித விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இருப்பினும் புதுக்கவிதையை விரும்பி நுகர்பவர்களைக் காணக் கூடியதாகவுள்ளது. நா.முத்துக்குமார் மற்றும் வைரமுத்து கவிதை வரிகளை விரும்பி இரசிப்பவர்கள் பலரை கண்டுள்ளோம். இதன் மூலம் கலைப்பொருளின் ஒழுங்குமுறை அல்லது அமைப்பு முறை என்பது மட்டுமே அழகினை நிறுவிக்காட்டாது என்பதனைப் புரிந்துகொள்ள முடிகிறது.

கலைஞர்கள் கலைப்படைப்பினை படைப்புச் செய்யும் பொழுது நுகர்வோரால் விரும்பப் பட வேண்டும் எனும் நோக்கினைக் கொண்டிருப்பார்கள். சாதாரணமாக நமது வாழ்விலே ஒரு பொருளை வாங்கும் பொழுது அது நமக்குப் பிடித்திருந்தால் மாத்திரமே வாங்கிச் செல்வோம். ஆகையினால் ஒவ்வொரு நிறுவனமும் எமது விருப்பங்களைக் கருத்திற் கொண்டே பொருட்களை



உற்பத்தி செய்கின்றன. அதேபோல் கலைஞனும் தன்னுடைய கலைப்படைப்பை பார்வையாளன் விரும்ப வேண்டும் எனும் நோக்கிலே படைப்புச் செய்வார்.

“நாட்டியசாஸ்திரம்” என்ற நூலின்படி நடிகர்கள் பார்வையாளரிடம் இரசனை அனுபவத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாயுள்ர். நடிகர்களுடைய “பாவனை” சுவைஞருக்கு இரசனையை ஏற்படுத்துகிறது. நாடகப்பாத்திரங்கள் நடிப்பின் மூலம் சுவைஞரிடத்து உளக்கிளர்ச்சியை ஏற்படுத்த வல்லவர்களாயுளர். இனம்புரியாவகையில் படிப்படியாக இவ்வுணர்ச்சி ஏற்படுகிறது. நடிகர்களின் நடிப்பினால் அழகியலிற்குரிய இவ்வுணர்ச்சிகள் பார்வையாளரின் கற்பனையில் உருவாகிறது. இந்தவகையில் நாட்டிய சாஸ்திரம் நூல் கலைஞன் சுவைஞனை ஈர்க்க அழகுடன் கலைப்படைப்பினைப் படைப்புச் செய்கிறான் என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. கலைப்பொருள் கலைஞனால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அழகினைக் கருத்திற்கொண்டு படைக்கப்படுவதில்லை என்றும் கூறக்கூடும்.





கலைப்படைப்பின் அமைப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டு அழகினைத் தீர்மானிக்க முடியாது என எடுத்துக் கொள்வோமானால், கலைப்பொருள் ஒன்றினை நுகர்பவரை அடிப்படையாகக் கொண்டு அழகினை கலைப்பொருளுடன் தொடர்புபடுத்த முடியும்.

நவீன மெய்யியலாளர்களான டேவிட்ஹியூம் எனும் அறிஞர் “அழகு என்பது பொருளைச் சுவைக்கும் ஆளினது (விடையியின்) மனநிலையிலேயே தங்கியுள்ளது.” என்றார். மற்றும் ஜோன்லொக் மனித மனத்தை “ரபுல ரச” (Tabulla Rasa) என்று குறிப்பிட்டார். எந்தவிதமான அடையாளமும் அற்ற தூய வடிவினதாக இருக்கும் நிலையை இது குறிப்பிடுகின்றது. அனுபவங்கள் வாயிலாக அதாவது புலன் உணர்வு வழியாக மனித மனத்துடன் அழகு பற்றிய காட்சி தொடர்புபடுத்தப்பட்டு விளக்கப்படல் வேண்டும் என்கிறார். கர்நாடக இசைக் கச்சேரிக்கு செல்லும் நபரொருவரிற்கு சுருதி, லயம், பண், தாளம் போன்றன பரீட்சயம்




இல்லாது இருந்த போதும் அந்நபர் இசைக் கச்சேரியை இரசிக்கின்றார் எனின் அந்நபர் புலக்காட்சி வழி மனதிற்குப் பெறப்பட்ட இசையில் கண்டுணர்ந்த அழகே காரணமாகும்.


உலகப்புகழ் பெற்ற லியானோ டாவின்சி, பிக்காஸோ போன்றோரது ஓவியங்கள் அழியாத அமரத்துவம் பெற்றமை மற்றும் இரவீந்திரநாத் தாகூரின் வங்கமொழிக் கவிதையான "கீதாஞ்சலி" நோபல் பரிசு பெற்றமை ஆகியன கலைக்கும் அழகுணர்விற்கும் இடையிலான தொடர்பினை வெளிக்காட்டுவனவாக உள்ளன. கலையும் அழகும் இணைந்தே காணப்படுகின்றன. ஒன்றில் கலைஞன் வாயிலாகவோ அல்லது கலைப்பொருள் வாயிலாகவோ அல்லது கலைப்பொருளை சுவைக்கும் நுகர்வோன் வாயிலாகவோ கலை, அழகு இணைந்தே உள்ளன எனும் முடிவுக்கு மேற்கூறப்பட்ட விளக்கங்களில் இருந்து வரக்கூடியதாகவுள்ளது.

# போதைக்கு அடிமையாக்கிய கும்பல் கைது!

யாழில் இளம்வயதினரை போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாக்கி, அவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்து வந்த நால்வர் அடங்கிய கும்பலொன்றைப் பொலிஸார் (07.09.2023) கைது செய்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய முறைப்பாட்டிற்கமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் யாழில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் பணி புரியும் பெண்ணொருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நால்வரும் யாழில் இயங்கும் பாரிய போதைக்கும்பலின் வலையமைப்பை சேர்ந்தவர்கள் என்றும், குறித்த வலையமைப்பைக் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






# கவிதையும் கவிஞர் முல்லையின் கவிதைகளும்

(“ஆறிப்போன காயங்களின் வலிகள்” கவிதைத் தொகுப்பை முன்வைத்த ஓர் விமர்சனக் கண்ணோட்டம்)

கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு,
ஓய்வுநிலைப் பிரதி அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

இலக்கிய வடிவங்களுள் மிகவும் பழைமையானது கவிதையாகும். கவிதை என்பது ஒரு மொழியின் செம்மையான இலக்கிய வடிவம். கலை மயமாக்கப்படும் வாழ்க்கையாகும். கவிதைக்கு உணர்வு அடிக்கல். கற்பனை படிக்கல். கருத்து உள்ளிடம். ஓசையும் அணியும் ஒப்பனை என்றவாறு இலக்கிய அறிஞர் குறிப்பிடுவர். கவிதை என்னும் மாளிகை சொல்லினாலும், பாடுபொருளினாலும் ஒழுங்கமைந்த உத்திச் சிறப்பினாலும் கட்டப்படுவது. ஒரு மொழியானது வளர்ச்சியின் அதியுச்சத்தையும், சொற்களின் பயன்படு முதிர்ச்சியையும், வெளிப்படுத்தலின் நுட்பத்தையும் அடைவது கவிதையிலேதான்.

தான்வாழும் சமூகச் சூழலின் தாக்கத்திற்காளான ஒரு கவிஞன், தன்னை ஈர்த்துக் கொண்ட சமூகம், இயற்கை, பிரச்சினை பற்றியும், அக ரீதியான தனது உணர்வுகள் பற்றியும், செறிவும், இசைப்போக்கும் அணிநலனும் நிறைந்த மொழிநடையில் எழுதும் எழுத்துக்கள் கவிதையாக மலர்கின்றன. சமூகத்தில் அவனது இருப்பு, இன்ப துன்பங்களின் உணர்வுநிலை, சமூக அக்கறை ஆகியவற்றைத் தெருவிக்கத் தேர்ந்தெடுத்துக்கொண்ட கருவியே கவிதையாகும். இது அவனால் உள்ளபடிக்கு உருவாக்கப்பட்ட உள்ளத்துணர்வின் படைப்பாகும்.

“கருவிலே திருவுடையவன் கவிஞன்” என்றும், “கவிஞன் சூழலின் அனுபவத்தினால் உருவாகிறான்” என்றும் வேறுபட்ட கருத்துக்கள் உருவாயினும், “உள்ளத்து உள்ளது கவிதை” என்ற கவிமணியின் வாக்கும், “நமக்குத் தொழில் கவிதை” என்ற மகாகவி பாரதியின் கருத்தும், “அது ஒரு தொழில் உற்பத்தி” என்னும் மேலைத்தேய முற்போக்கு அறிஞர்களின் எண்ணமும் குறிப்பிடத்தக்கன.

ஏனைய இலக்கிய வடிவங்கள் வேலைக்காரருடன் உரையாடு வதைப்போல அமைகையில், கவிதையானது இளவரசியுடன் உரையாடுவது போன்ற மயக்கந் தரவல்லது என்றார் ஓர் கவிஞன். இன்று மரபுக் கவிதையின் இலக்கண வரம்புகளுக்குக் கட்டுப்படாது புதுக் கவிதை முயற்சிகள் வரவேற்புப் பெற்று வருகின்றன.

மரபோ, புதுமையோ எதுவாயினும் உள்ளடக்கத்தினால்தான் சமுதாயப் பயன் எய்த முடியும் என்ற நிலை தற்காலக் கவிதைகளில் காணப்படுகின்றது. சொற்சிக்கனம், பேச்சுப்பாங்கு, உத்தி, குறியீடு, படிமம், வடிவமிழுப்பு ஆகிய பண்புகள் கொண்டு புதுக்கவிதை மலர்ந்துள்ளது. இலக்கண மரபுகளை மீறியதாகவும், உணர்ச்சிக்கும் கருப்பொருளுக்கும் உயிர் கொடுப்பதாகவும் புதுக்கவிதை அமைந்துள்ளது. இதனால் மரபறியாத நூற்றுக் கணக்கானோர் கவிதையுலகில் பிரவேசித்து வெற்றியும், தோல்வியும் கண்டுள்ளனர்.

வளர்ந்து வரும் இளங் கவிஞர் முருகையா சதீஸ் என்பவர், தனது முதற் கவிதைத் தொகுதியான "ஆறிப்போன காயங்களின் வலிகள்"(2021) எனும் நூலினை "கவிஞர் முல்லை" என்ற புனைபெயரில் வெளியிட்டுள்ளார். இவர் தான் கண்டு, கேட்டு அனுபவித்த தரிசனங்களை - நிஜங்களை, அருட்டுணர்வுகளை 48 சிறியதும், பெரியதுமான புதுக்கவிதைகளாக இதில் படைத்துள்ளார். இளவயது இளைஞன் மனதில் எற்பட்ட இனிப்பான, கசப்பான அனுபவங்கள் எளிய சொல்லோவியங்களாகவும், உணர்வின் வெளிப்பாடுகளாகவும் விளங்குகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் சிறப்பு நெறியைப் பயின்று நிறைவு செய்த இவர், அவ்வப்போது பல்கலைத் தமிழ்சார் மன்றத்திலும், ஏனைய இலக்கிய அமைப்புக்களிலும் பாடிய கவிதைகளும் இவற்றுள் அடங்கும். ஏடுகளில் வந்த சிலவும் உள.

இளவயதுக்குரியதாய் எழுச்சியூட்டும் காதல், இனிய கிராமத்து நினைவுகள், தாயின் மீதான பக்தி, கல்வி தந்த ஆசான்கள், பல்கலைக்கழக வாழ்வின் இனிமைகள், தாய் மண்ணின் நினைவுகள், அவற்றை இழந்துவிட்ட வலிகள், அவற்றைப் பற்றிய மீள் திரும்பும் நினைவுகள், யுத்த காலக் கெடுபிடிகள், எழிலான இயற்கை வளம், ஏழ்மை, சமகாலக் கொரோனா, முதுமையின் தவிப்பு, சுனாமி அவலம், உறவுகள், நட்பு, கிட்டாத சுதந்திரக் காற்று, தாலாட்டு, சுதந்திர தாகம், மலையகத்தோர் வாழ்வு, சிங்களத் தோழன், புதிய திருப்பம் முதலான பல பாடுபொருள்களைத் தழுவிய கவிதைகள் முல்லைக்கவியின் நூலில் இடம்பிடித்துள்ளன. இவையாவும் 2012 - 2021 வரையான காலப்பகுதிக்குரியவையாகும்.

கவிதைகளை நோக்கும்போது, தமிழ் மொழியாளுமை வளர்ச்சியையும், கவிதை பற்றிய புரிதலையும் படிப்படியாகக் கவிஞரிடையே கண்டுகொள்ள முடிந்துள்ளது. தனது மனதைக் கலவரப்படுத்திய, தாக்கமுறச் செய்த சம்பவங்களை ஏக்கத்துடனும், தாக்கத்துடனும், வீறாப்புடனும் எழுத்தில் வடித்திடத் துடிக்கும் ஆர்வம் இவற்றினூடே பட்டுத் தெறிக்கிறது.

"தலை கோதிப் பிடரி தடவி
இமை மூடி இதழ் விரித்து
நீ பேசும் வார்த்தைகள்
இரகசியமாய்

என்னுள்ளே கேட்கின்றன.
படிப்பம் படிப்பம் என்று
புத்தகத்தைத் திறந்தாலும்
உனது முகம்தான்
பிம்பமாய்த் தெரிகிறது.
ஓ!
என் மனமே உன்னில்
மண்டியிடுவது புரிந்தது"
("காதல் விதை" கவிதையிலிருந்து, பக்:99 - 100)

"வெட்கம் வெட்கம் என்று
மனசு சொன்னாலும்
உதடு எப்பவும்
உன் பெயரைத்தான்
உச்சரித்துக் கொண்டிருக்கும்"
("புதிய அத்தியாயம்" கவிதையிலிருந்து, ப:96)

"வெட்கிச் சிவந்த
அந்தி வானத்தில்
கூதற்காற்று மெல்ல வீசும்
இமை மூடித் திறக்கையில்
அடிவயிற்றில் குரலெடுத்து
ஒரு பறவை கத்திச் செல்லும்
தனிமையின் துயரில்
அதுவும் பயணிக்கிறதோ?"
("என் அவள்" கவிதையிலிருந்து, ப:87)

கவிஞர் முல்லையின் காதல் கவிதைகளின் பரிமாணங்களுக்கு இவை சில சான்றுகள். உணர்வு, மொழியழகு, எளிமை, யதார்த்தம் ஆகியவை கலந்து இளங்காதலானாலும் காதல் கொண்டோர் அனைவரது எண்ணங்களுக்கும் பொதுவானவையாக விளங்குகின்றன. புதுக் கவிஞராயினும் அவருக்குப் புதுக்கவிதை வாலாயமாய் வந்துள்ளது.

"அந்தி வானத்து
மாலைப் பொழுதுகள்
ஊர்கூடி மகிழும்
ஆலமரத்து நிழல்.
விறகுச் சுமையுடன்
அன்ன நடைபோடும்
பெண்கள்."
("நினைவுகள்" கவிதையிலிருந்து, ப:01)

கடந்தகால ஊர் பற்றிய நினைவுகளை இசைமீட்டிக் கழிவிரக்கம் கொள்ள வைக்கிறது இக்கவிதை.

"வானிலே பறக்கும்
நூலறுந்த பட்டங்களாய்ச்
சுற்றித் திரிந்த அந்தப்
பள்ளியின் நாட்கள் - இப்போ
ஆறிப்போன காயங்களாய்
வலிக்கின்றன."
("ஆறிப்போன காயங்களின் வலிகள்" கவிதையிலிருந்து, ப:27)

அடிபட்ட மனதில் ஆழப் பதிந்துள்ள வடுக்கள் எப்போதும் கடந்துவிட்ட காலத்தை நினைவூட்டுவன. இங்கே ஆறிப்போன இளமைப் பருவத்துப் பள்ளி வாழ்க்கைகூடக் கவிஞருக்கு வலிகளைத் தருவதைப் பார்க்கிறோம். இது போன்றதே தாய் மண்ணின் பிரிவு. இடப்பெயர்வுத் துயரங்கள், தமிழரின் தொன்மைகள் கபளீகரஞ் செய்யப்படல், மீண்டும் பிறந்த மண்ணிற்குத் திரும்பும்போது கண்ட துன்பகரமான காட்சிகள் என்றவாறு கவிஞரின் உள்ளம் இழந்துவிட்டவைகளுக்காக ஏங்கி

ஏங்கித் துடிப்பதைப் பல கவிதைகள் துயரோடும் உணர்ச்சியோடும் நம்மிடையே இனம்புரியாத அவலத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தி விடுகின்றன. கவிஞரது சமூகப் பிரக்ஞைக்கு எடுத்துக்காட்டாக "வரட்சி" எனும் கவிதை விளங்குகின்றது.

"காடழிப்பின் உக்கிரத்தால்
வான் மழையும் சிந்தவில்லை
மண்ணை நம்பி வாழ்ந்தவர்கள்
பட்ட கஷ்டம் கொஞ்சமில்லை!
ஏர் உழுத நிலங்களிலும்
ஏரிகளைக் காணவில்லை!
மாடு மேய்த்த பூமியிலும்
குளங்களையும் காணவில்லை!
ஆற்று மணல் எல்லாம்
அகழ்ந்து விலை போயிடிச்சாம்!"
(ப:43)

சமகால யதார்த்த நிலை இதுதான். தமிழர் பிரதேசங்களின் வேதனை கலந்த விரக்திதான் கவிதையைப் படிக்கையில் நமக்கு ஏற்படுகிறது. வட்டுவாகல் பாலம், குருந்தூர் மலை, மலையக வாழ்வு முதலான தலைப்புக் கவிதைகளும் சமூகப் பிரச்சினைகளில் மையங்கொண்டு அரசியல் பேசியுள்ளன. முல்லை அவர்களின் தாயகப் பற்றும், தாயக விடுதலைக்கான ஏக்கமும் அவரது "நாளை?" என்ற கவிதையில் ஊடாடுகிறது. சொல்லாத சேதிகளைச் சொல்வது போலிருக்கிறது.

"மண்மீது நேசம் கொண்டவர்களே
இன்றே தூங்கி விடுங்கள்.
இல்லையேல் - நாளை
எண்ணற்ற தகைமைகளோடு
கல்லறை சேர முடியாமல்
காற்றாகிப் போகலாம்.
நாளை விடியலைக் காண
இருக்க மாட்டோம் என்பதையா
இவை அடையாளப்படுத்துகின்றன?"
(ப:65)

ஈழத் தமிழர் அனைவரது நெஞ்சங்களிலும் கனன்று எழும் சுவாலையாக இக் கவிதையின் பாடுபொருள் அமைந்துள்ளது. பாதை தெரியாத எமது பயணங்கள் காட்டிய படுகுழித்துயரம் நாம் அறிந்ததே. அதன் அழிவில் நாம் கண்ட பயங்கரம் எமது இனிய பழைமையான வாழ்வையும், எதிர்கால நம்பிக்கையையும் வெகுதூரம் தொலைத்து விட்டதும் உண்மையே. வெறும் வயிற்றுக்கு மட்டும் சொந்தமாகிப்போன மக்களாக வாழ்வதில் அர்த்தமில்லை. மானமும், உணர்வும், உரிமையும் மறந்து, பண்பாட்டை இழந்த மண்ணுக்கு விடுதலை எட்டாக்கனி என்பதை இளங்கவிஞர் முல்லை ஆணித்தரமாக வலியுறுத்தி நிற்கிறார்.

இவரது கவிதைகள் இயற்கை தொடர்பாகவும் இனிமை தருகின்றன. உறவு நிலையிலும் பெருமை சேர்த்துள்ளன. ஏதோ உன்னதத்தின் உச்சியைக் காட்டுவன என்று கூறவில்லை. உணர்வு கலந்து படையல்களை உண்மை வெளிச்சமாக - நிஜ தரிசனங்களாகத் தந்துள்ளார். காலம் அனுபவங்களினூடு கவிஞனைப் புடம் போடும். அதுபோல் கவிஞர் முருகையா சதீஸ் அவர்களும் எதிர்காலத்தில் ஈழத்தமிழர் இலக்கிய உலகில் தனக்கோர் இடத்தைப் பெறுவார் என நம்புவோமாக.

எஸ்.எஸ்.நுஜன்




# இலங்கையில் இளையோர் உலகக் கிண்ணம் 2024

ஐசிசி இளையோர் உலகக் கிண்ணம் 2024 இனை இலங்கை நடாத்தவுள்ளது. இதன் 41 போட்டிகளும் கொழும்பில் உள்ள ஐந்து மைதானங்களில் நடைபெறவுள்ளது. உலகக் கிண்ண ஆரம்ப ஆட்டம், அரையிறுதி ஆட்டங்கள் மற்றும் இறுதி ஆட்டம் என்பன ஆர் பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும் ஏனையவை பி சரா ஓவல் (P Sara Oval), சிங்களிஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் (SSG) உட்பட ஏனைய நான்கு மைதானங்களிலும் நடைபெறவுள்ளது.

இந்த தொடர் ஐசிசியின் புதிய முறையான ரவுண்ட் ராபின் (குழு நிலை) அமைப்பில் நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டியில் நடாத்தும் நாடான இலங்கை பத்தொன்பது வயது அணியினர் சிம்பாப்வே பத்தொன்பது வயது அணியினருடன் மோதுகின்றது. இத் தொடர் 2024ம் ஆண்டு சனவரி 13ம் திகதியன்று ஆரம்பிக்கவுள்ளது. கடந்த 2022 இல் நடைபெற்ற தொடரில் இந்திய பத்தொன்பது வயதினர் கிண்ணம் வென்றிருந்தனர்.

டெஸ்ட் அந்தஸ்து உள்ள 11 அணிகளும் நேரடியாக தகுதி



பெற மற்றைய ஐந்து அணிகளும் தகுதிகாண் தொடர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டன. இந்த 16 அணிகளும் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழுநிலை ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

குழு A: இந்தியா, பங்களாதேஷ், அயர்லாந்து, மற்றும் அமெரிக்கா

குழு B: இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், மற்றும் ஸ்கொட்லாந்து

குழு C: அவுஸ்திரேலியா, இலங்கை, சிம்பாப்வே, மற்றும் நமீபியா

குழு D: ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நியூசிலாந்து, மற்றும் நேபாளம்.




இம்முறை 12 அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும். கடந்த தொடர்களில் 8 அணிகளே முன்னேறின. இந்த 12 அணிகளும் ஆறு அணிகள் கொண்ட இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு நடைபெறும் சூப்பர் சிக்ஸ் சுற்றில் இருந்து நான்கு அணிகள் அரையிறுதிக்கு தேர்வாகவுள்ளன. முன்னைய காலங்களில் இரண்டாம் சுற்று நோக்-அவுட் முறையிலான வெளியேற்றும் சுற்றாக அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

| DATE | RPICS | P SARA | SSC | CCC | NCC |
|---|---|---|---|---|---|
| Saturday 13 January | SL v ZIM | NZ v NEP | | ENG v SCO | |
| Sunday 14 January | BAN v IND | | AUS v NAM | SA v WI | |
| Monday 15 January | | PAK v AFG | IRE v USA | | |
| Tuesday 16 January | | | | SA v ENG | SL v AUS |
| Wednesday 17 January | | NEP v PAK | | WI v SCO | NAM v ZIM |
| Thursday 18 January | IND v USA | AFG v NZ | BAN v IRE | | |
| Friday 19 January | | | ZIM v AUS | | ENG v WI |
| Saturday 20 January | IND v IRE | | | SCO v SA | AFG v NEP |
| Sunday 21 January | | PAK v NZ | SL v NAM | USA v BAN | |
| Monday 22 January | | | | | |
| Tuesday 23 January | | | A4 v D4 | | B4 v C4 |
| Wednesday 24 January | A1 v D2 | C2 v B3 | | | C1 v B2 |
| Thursday 25 January | | D3 v A2 | C3 v B1 | D1 v A3 | |
| Friday 26 January | | | B3 v C1 | | |
| Saturday 27 January | A1 v D3 | D2 v A3 | | | B1 v C2 |
| Sunday 28 January | B2 v C3 | | | | D1 v A2 |
| Monday 29 January | | | | | |
| Tuesday 30 January | SF1 AD1 v BC2 | | | | |
| Wednesday 31 January | Reserve | | | | |
| Thursday 01 February | SF2 BC1 v AD2 | | | | |
| Friday 02 February | Reserve | | | | |
| Saturday 03 February | | | | | |
| Sunday 04 February | FINAL | | | | |
| Monday 05 February | Reserve | | | | |
| TOTAL OF 41 GAMES | | | | | |